770

...n's Education Series No 1.

# POSITION OF INDIAN WOMEN

PART I.

# இந்திய மாதர்களின் நிலைமை.

முதற்பாகம்.

MADRAS.

...DIN PRESS, 14 BAKER STREET,

Y15.2
N16
59044

மாதர் மணிமாலை —— க.

# இந்திய மாதர்களின் நிவஸனம.

இது

ஸ்ரீயுத. கிருஷ்ணசாமி சர்மா

(எழுதியது.)

முதல்பாகம்:

விலை அணு 4.] 1916 [விலை அணு 4.

" ஜனனீ ஜன்மபூமிஸ்ச ஸ்வர்க்காதபிகரியஸி "
" மாதுர் தேவோபவ " " மாதாபூர்வரூபம் "



இந்திய ஸ்திரீபுருஷர்களை ஈன்றெடுத்த

பாரதமாதாவிற்கும்

என்னைப்பத்துமாதஞ் சுமந்துபெற்ற

அருமைத்தாய்க்கும்

உடல் பொருளாவியுடன் சமர்ப்பணஞ்செய்கிறேன்.

# முகவுரை.

அருந்தவப் புதல்விகளை ஈன்றெடுத்த இப்பாரத கண்டம், சொர்க்கத்திற்கும் மோக்ஷத்திற்கும் ஏதுவான கருமங்களுக்குஞ் சாதகமாயிருக்கின்ற படியாலும், மாதர்களின் முயற்சியினால் மூடர்களும் மகான்களாயினரென்பதாலும், மாதர்களே சகல நன்மைக்குந் தீமைக்குங் காரணமாயிருத்தலாலும், அம்மாதர்களைக் கொண்டே நம்பாரதகண்டம், தானிழந்த ஐஸ்வர்யத்தையும், ஸ்தானத்தையும், சுதந்தரத்தையும், செல்வாக்கையும் பெறமுடியுமாகையாலும் என் அற்பபுத்தியைக் கொண்டு இம்மகத்தான விஷயத்தை எழுதலானேன். தற்காலம் நான் நமது தேச பக்த சிரோன்மணியான மகாத்மா மோஹன்தாஸ் கரம்சந்த் காந்தியவர்களின் சத்யாகிருகாஸ்ரமத்திலிருக்கிறபடியாலும், அச்சுக்கூடம் வெகு தூரத்திலிருப்பதாலும், சீக்கிரத்தில் வெளிவரத் தடைபட்டது, இதில் ஆங்காங்கு குற்றங்கள் பலவிருப்பினும் அதை ஒரு பொருட்டாகக் கருதாது விஷயத்தை கவனிக்கற்பாலது. இவ்விஷயங்கள், எஸ். சௌந்தரராஜமய்யங்கார், பீ:ஏ. அவர்களால் நடத்தப்பெற்றதும், கல்வி கேள்விகளில் மிக்கோர்

களின் புகழ்ச்சிக்கு உறைவிட மானதும், தமிழ் நாட்டிலுள்ள பண்டித பாமரர்கள் பாடிக்கொண்டாடும் "இந்துநேசன்" என்னும் தினசரிப் பத்திரிகையில் பன்முறை வெளிவிடுத்தேன். சிற்சில நண்பர்களின் வேண்டுகோட் கிரங்கி இந்நாட்டு ஸ்திரீ புருஷர்களுக்கும் பயன்படுமாறு, அநேக புத்தகங்களைக் கொண்டு இப்போது அதை ஒருவாறு சேர்த்துப் பிரசுரிக்க முன் வந்தேனாதலால் இச் சிறிய நூலைத் தமிழ் நடவை ஏற்றுக் கொள்ளுமாக!

சத்தியாக்கிரஹாஸ்ரமம்,<br>ஆமதாபாத்,<br>15—12—15.

கிருஷ்ணசாமி சர்மா.

# அட்டவணை.


1. மாதர்களின் இயக்கம்.

2. மாதர்களின் பூஷணம்.

3. மாதர்களின் ஸ்வதர்மம்.

4. மாதர்களின் நிலைமை,

# WOMEN'S GREATNESS

## மாதர்களின் இயக்கம்.

---

இப்பிரபஞ்சத்தின் கண்ணுள்ள சகல நாடுகளி லும் இற்றைக்கு நாகரிகத் தெளிவினால் மாதர்களும், புருஷர்களும் ஒருவருக்கொருவர் சீர்திரு த்த முயலுகின்றார்கள். இப்பொழுது எந்நாட்டிலும் ஸ்திரீகளின் நடமாட்டம் தினே தினே அபிவிர்த்திய டைந்து வருகின்றது. பற்பல நாட்டு மாதர்கள் பலப்பல மதாசார சம்பிரதாயமுள்ளவர்களா யிருப்பினும் பொ துவாக மாதர்கள் அபிவிர்த்தி யடையவேண்டுமென்கிற அவா அவர்களுக்கு உண்டாயிருக்கின்றது. இத்தகைய கிளர்ச்சித்தாழ்ந்த வகுப்பைச்சேர்ந்த மாதர்களுக்கும் உண்டாயிருக்கின்றது. பண்டித பாமரர்களும், தரித்திர ஐஸ்வர்யர்களும் பிரபஞ்ச சரித்திரத்தில் தலைமை ஸ்தா னத்தை வகிக்கவேண்டு மென்னு மாசையின்பொருட் டுக் கல்வி கற்கல் முதலிய தற்கால வழிகளையும் நாடுகின் றார்கள். இத்தகைய மாதர்களின் கிளர்ச்சியானது பிர பஞ்சத்தை ஒழுங்குபடுத்து மென்பதற்கு ஐயமேயி ல்லை. இது நாட்டிலுள்ள ஆடவர்களையும் பெண்டிர்களை

யும் சமமாக்கவந்த நவசக்திபோலும் காணப்படுகின்றது. இந்நவசக்திக்குக் காரணம அவரவர்களுக்குரிய கடமையைச் செலுத்துவதே. மேனாட்டு ஸ்திரீகள் கீழ்நாட்டு ஸ்திரீகளை சீர்திருத்த முயலுவதும், கீழ் நாட்டு ஸ்திரீகள் மேனாட்டு ஸ்திரீகளைச் சீர்த்திருத்த முயலுவதும் இற்றைக்குச் சகஜமாயிருக்கின்றது. அமெரிக்காகண்டத்திலுள்ள ஸ்திரீகளைப்போலவே ஐரோப்பாகண்டத்திலுள்ள ஸ்திரீகள் சுதந்தரத்தை வகிக்கப் பாடு படுவதும், ஐரோப்பா, அமெரிக்காக் கண்டத்திலுள்ள ஸ்திரீகளைப்போலவே ஆசியா கண்டத்திலுள்ள ஸ்திரீகள் சுதந்தரத்தை வஹிக்கப் பாடுபடுவதும் இப்பொழுது உலக இயற்கையாயிருக்கின்றது. மாதர்களின் மனோ தர்மம் இற்றைக்குப்பலவேறுபாடுள்ளவையாயினும், பண்டைகாலத்தில் மாதர்கள் எந்நாட்டிலும் ஒரே மாதிரியான மனோதர்மத்தை வகித்திருந்தார்களென்பது சரித்திர ஆராய்ச்சியினாலறியலாம். பண்டைகாலத்தில் ஸ்திரீகள் புருஷர்களுடன் கூட்டங் கூட்டமாகக்கூடி அவர்களுடன் நாடு நாடாகக் குடும்ப சகிதஞ் செல்வதுண்டு. அவர்கள் அக்காலத்தில் புருஷர்களுடன் சமத்துவமாக வாழ்ந்து கொண்டு வந்தார்கள். புராதனகாலத்தில் ஸ்திரீகள் புருஷர்களைப்போலவே திடகாத்திர முள்ளவர்களாயும், புத்திமதிகளில் சமமுள்ளவர்களாயும், நாகரிகமுள்ளவர்களாயுமிருந்தார்கள். காட்டில் வசிக்குஞ் சிற்சில

ஜாதியார்கள் நாகரிசமற்றவர்களாயிருந்த போதிலும், ஆண்பெண் அடங்கலும் அவர்கள் சமத்துவத்தையே யடைந்திருந்தார்கள். ஸ்திரீ புருஷர்களுக்கு விவாக மென்னுஞ் சடங்கு வேதவிதிப்படி ஏற்படாததற்கு முன்னர் அவர்கள் ஒருமையுடன் வாழ்ந்ததாகத் தெரியவில்லை. விவாகச்சடங்கு வேதசாஸ்திரப்படி ஏற்பட்ட முதற்கொண்டே வீடென்றும், குடும்பமென்றும், கோத்திரமென்றும், விரதமென்றும் ஏற்பட்டது. இவ்வேதசாஸ்திர அனுசரணை செய்பவர்களுக்கே ஆரியரென்று பெயர். (இவர்களுக்கு முன்னர் திராவிடர் இருந்தார்கள்) பிள்ளைகளைக் காப்பாற்றுவதும், வீட்டு காரியங்களைப் பார்ப்பதும், வீட்டிலுள்ளோர்களுக்குத் தக்க சௌகரியஞ் செய்வதுமான இத்தொழில்களை ஸ்திரீகளே புரிந்துவந்தார்கள். இன்னும், அம்மாதர்கள் பண்டைகாலத்தில் நிலங்களை உழுதல் முதலிய வேலைகளையுஞ் செய்து கொண்டிருந்தார்கள். நாள் செல்லச் செல்ல உழுதல் வேலையை விட்டு விட்டு நாற்று நடுதல், களை பிடுங்கல், தானியஞ் சேகரித்தல் முதலான சுலபவேலைகளைச்செய்து கொண்டு வந்தார்கள்.

இங்ஙனம் அம்மாதர்கள் ஊரூராய்ப் புருஷர்களுடன் சென்று கொண்டிருப்பதை விட்டு விட்டு ஸ்திரமான குடித்தனக் காரர்களானார்கள். இந்திய சரித்திரத்தில் வெகு காலத்திற்கு முன்பு ஐரோப்பிய பாஷை

ஏற்படாததற்கு முன் இந்தியாவில் சீதா, த்ரௌபதி முதலானவர்கள் தங்கள் கணவன்மார்களுடன் கானகஞ் சென்றும், அவர்களின் கஷ்டங்களில் உதவி புரிந்து மிருந்தார்கள். இராஜாங்க விஷயத்தில் அம்மாதர்கள் கணவன்மார்களுக்கு உதவியும் புரிந்து வந்தார்கள். இந்தியாவைப்போலவே, எகிப்து தேசத்திலும் ஹீப்ரு நாட்டிலும் மாதர்கள் விசேஷ கீர்த்தியை யடைந்தார்கள். ஜூடியாவில் மிரியாம் காலத்தில் பெண்கள் வெகு கீர்த்தியை யுடைந்தார்கள். கிறிஸ்து பிறந்த 12-வது நூற்றுண்டிலும் பெரிய வேதாந்தினியாகிய டிபோரா என்பவள் ஒண்டிப் பனைமரத்தின் கீழிருந்து கொண்டு எப்ரையிம் மலையில் வசித்துக் கொண்டிருந்தாள். ஸிஸராவில் நடந்த ஜேல்கலகத்தில்டிபோராவின்கீர்த்தனத்தினுலும், யுத்த கீதத்தினுலுமே ஜனங்கள் வெற்றி யடைந்தார்கள், புராதனகாலத்தில் ஜூடியா நகரில மாதர்கள் அரசுசெலுத்திக்கொண்டும், வேதாந்தங்கூறிக் கொண்டும்,நியாயத்தீர்ப்பு சொல்லிக்கொண்டும், யுத்தத்தில் போர்புரிந்து கொண்டு மிருந்தார்கள். அரேபியாவிலும் பழைய முஸல்மான் மாதர்கள் புருஷர்களைப் போலவே சர்வ சுதந்தரங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். இதினுலேயே இஸ்லாம் மதத்தின் பெருமை நன்கு புலப்படுகின்றது. மகம்மதின் முதல் மனைவியான கடிஜா என்பவள் தனது கணவனுடன் 25 வருடகாலம் சுதந்தரத்துடன் வாழ்ந்துவந்த

ன்ள். அவள்மரணத்திற்கப்புரம், மகம்மதின் இரண்டாவது மனைவியான அயேஷா என்பவள் முன்னினும் அதிக சுந்தரத்தை யடைந்து ஒட்டகச் சண்டையில் சத்துருக்களை முறியடித்தாள். இவள் குமாரத்தியான படீமா என்பவள் இராஜாங்கவிஷயத்தில் அதிக ஊக்கத்துடன் சிரத்தை எடுத்துக்கொண்டுவந்தாள். மகம்மதின் பேத்தியான ஜைநாப் என்பவள் உள்வாழ்க்கையிலும் வெளி வாழ்க்கையிலும் தன்னை யொத்தவர்கள் ஒருவருமில்லை யென்பதாகக் கீர்த்தி பெற்றாள். அக்காலத்தில் மாதர்கள் சோம்பலின்றி நாட்டின்பொருட்டு உழைத்தார்கள். மாதர்கள் பெரிய உபந்நியாசிகளாகவுமிருந்தார்கள். சுல்தான் முதலாவது பையாஜிட் அலசாட்சிகாலத்தில் ஸ்திரீகள்மசூதியில் மதசம்மந்தமான கிரந்தங்களைப் படித்து உபந்யசிப்பதும், நமாஸ் படிப்பதுமான வேதாந்த காரியங்களைச் செய்திருந்தார்கள். அக்காலத்தில் பெண்களும் பிள்ளைகளும் ஒருங்கே சேர்ந்து கலாசாலைகளில் கல்வி பயின்று வந்தார்கள். உம்மயாத் அரசாட்சிகாலத்திலும், அப்பாஸிட் இராஜாங்ககாலத்திலும், கதிர்பில்லாவின் அரசாங்க காலம்வரையில் முஸல்மான் மாதர்கள் தாராளமாக வெளியில் வந்து மேடைப்பிரசங்க முதலியவைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். மன்சூர் சுல்தான் காலத்தில் இம்மன்னனின் சகோதரிகளான இருமாதர்கள் யுத்த உடை தரித்திக்கொண்டு பைஸன்டையன் யுத்தத்திற்

குச் சென்றிருந்தார்கள். ராஷீட் இல்மாமன் என்னும் சுல்தானின் அரசாட்சி காலத்தில் மாதர்கள் புருஷர்களுடன் கமனஞ்செய்வதும், தர்க்கம் புரிவதும், பாலப்பெண்கள் குதிரை சவாரி செய்து இராணுவங்களைப் பரீட்சிப்பதுமாக யிருந்தார்கள். பர்ஷிய சுல்தானுன ஹாரோன் ஆல்ராஸ்சித் என்பவரின் மனைவியான ஜுபிடா என்பவள் சிறந்த கவியெனப் பெயர்பெற்றதுடன், தனது பணத்தைக் கொண்டு மெக்காவில் ஒரு பெரிய வாய்க்காலையுந் தோண்டி, கிரீஸ் ஜாதியார்களால் பாழடைந்த அலெக்ஸாண்டிரியா என்னும் பட்டணத்தையுங் கட்டி வைத்தாள். அம்மாதர்களின் சுதந்தரம் டார்டார ஜாதியார்களின் படையெழுச்சிக் காலந்தொட்டே குறைந்துவந்தது, அன்னியப் படையெழுச்சியினுலும், நாகரிகமற்ற ஜாதியார்களின் சம்ஸர்க்கங்களினுலும், மாருச் சண்டையினுலும், கீழ்நாடுகளில் நாகரிகங் குறைந்து மாதர்கள் முன்னிருந்த சுவதந்தரத்தையுமிழந்தார்கள். பழைய ஈஜிப்டு நாட்டில் மாதர்கள் புருஷர்களுடன் சுதந்தரத்தை யனுபவிக்கச் சட்டம் ஏற்பட்டதுடன், குருபீடத்திற்கும், அரசாட்சிக்கும் அக்குள்ளவர்களென்றுஞ் சட்டமும் ஏற்பட்டிருந்தது.

ஐரோப்பாவிலிருக்குங் கிரீஸ் நாடும் அக்காலத்தில் மாதர்களின் சுதந்தரத்தைக் கொடுத்தது. இந்நாட்டின், பேனிலோப், ஆணட்ரோமாச், கினிடம்னஸ்டிரா ஆகிய இம்மாதர்கள் கிரீஸ் நகரத்தில் அதிக

மேன்மைபெற்றவர்கள். இதாலியாவும் மாதர்களுக்குச் சர்வ சுதந்தரமுங் கொடுத்ததுடன் நல்ல போர்த்திறமையுமுள்ளவர்களாகவுஞ் செய்தது. இங்கிலாந்திலும், அக்காலத்தில் போடீஷியா என்பவள் சுதந்தரத்தை யடைந்ததுடன் இவளே ரோமபுரியின் மேல் படையெடுத்துச் சென்றாள். மாதர்கள் ஒவ்வொரு நாட்டிலும் அதிகமேன்மையுடன் சுதந்தரத்தை யடைந்திருக்கிறார்கள். ஸ்திரீகளின் தூண்டுதலினாலேயே அநேக வீரர்கள் யுத்த முனைக்குச் சென்று கீர்த்தியைப்பெற்றிருக்கிறார்கள். சகல ஜனங்களையுந் தன் வழிப்படுத்திய சங்கராசாரியர் முதலானோர் ஸ்திரீகளின் தூண்டுதலினாலேயே மேன்மை பெற்றார். துளசிதாஸ் மோக்ஷத்தையடைந்ததும், இராமானுஜர் துறவறம் பூண்டதும், இராமகிருஷ்ண பரமஹம்ஸர் மதாசாரியராக இருந்ததும் ஸ்திரீகளின் துண்டுதலினாலேயே. ஆகையால் ஸ்திரீகள் எந்நாட்டிலும் மேலான சுதந்திரத்துடன் கீர்த்தியைப்பெற்றிருக்கின்றார்கள். பிரான்சு தேசத்தில் மாதர்கள் புருஷர்களைப்போல் சட்டநிர்வாகச் சபைகளில் மெம்பர்களாகவுமிருந்தார்கள். பின்லாந்து, ஸ்வீடன், நார்வே முதலியநாடுகளில் இற்றைக்கும் மாதர்கள் பார்லிமெண்டில் ஓட்டு கொடுப்பதும், சட்டசபைக்குத்தக்க மனிதர்களைப் பிரதிநிதியாக அனுப்புவதும், முனிசிபாலிடிகளில் மெம்பர்களாக யிருப்பதும், இராஜநீதிகாரியங்களில் ஊக்கம் எடுத்துக் கொள்ளுவது

மூண்டு. ருஷியாவிலும் அனேக மாதர்கள் டாக்டர்களாகவும், இஞ்சினியர்களாகவும், கிரந்தகர்த்தாக்களாகவுமிருக்கின்றார்கள். 1870-வருடத்திய விவாகமான மாதர்களின் சொத்து ஆக்ட்டுபடி ஸ்திரீகள் சொத்துக்களை வாங்கவும், விற்கவும், அனுபவிக்கவும், வர்த்தகஞ் செய்யவும் கூடும். இம்மாதிரியாகவே இந்துமாதர்களும் மனுஸ்மிருதிபிரகாரம், கிறிஸ்து பிறப்பதற்குமுன் மேற்கூறிய சகல உரிமைகளையும் வகித்தவர்களாய் சுதந்தரத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். இங்கிலாந்தில் 1894-ம் வருடத்தில் மாதர்கள் டிஸ்டிரிக்ட் கவுன்சிலர்களாகவும், லண்டன் மாகாணக்கவுன்ஸில் மெம்பர்களாகவுமிருந்தார்கள். 1907-ம் வருடமுதற் கொண்டு ஸ்திரீகள் மேயர்களாகவும், (நகரத்தலைவர்களாகவும்) கிராம அதிகாரிகளாகவும், மதபோதகர்களாகவுமிருந்தார்கள். அமெரிக்கா, நார்வே முதலிய நாடுகளில் மாதர்கள் ஜட்ஜிகளாகவும், ஜூரிகளாகவுமிருந்து வெகு நியாயத்துடன் விசாரித்து வருகின்றார்கள். இங்கிலாந்து முதலியநாடுகள் ஏனைய நாடுகளைவிட நாகரிகத்திலும் ஐஸ்வர்யத்திலும், கைதொழில் வியாபாரங்களிலும் மேன்மையை யடைந்தன. அந்நாட்டு மாதர்களின் அபிவிர்த்தியினாலேயே. மாதர்கள் தக்க சுதந்தரத்துடன் ஆடவர்களைப்போல் கல்வி கேள்விகள் முதலிய சகலவழிகளையும் நன்கு ஆராய்ந்து நடப்பின், நாடானது உன்னத நிலைமைக்கு வருவதென்பதும் ஓர் அதிசயமா? இங்கி

லாந்தானது தமது குமாரத்திகளைக் கல்வி கேள்விகளி லும், கைத்தொழில் வியாபாரங்களிலும், சாஸ்திர விசா ரங்களிலும் பழக்குவதினால் இற்றைக்கு மற்ற நாடுகளை விட உன்னதபதவியையடைந்திருக்கின்றது. மத்திய வகுப்பைச்சேர்ந்த மாதர்கள், தொழிற்சாலைகளில் செ ன்று புருஷர்களைப்போல் சரீரகஷ்டஞ்செய்து புதிய புதிய இயந்திரங்களையுங் கண்டுபிடிக்கின்றார்கள். இம்மா திரியாகவே, ஸ்திரீகள் மேனாட்டில் கொஞ்சங் கொஞ்ச மாக உழைத்து வந்ததினால் எந்நாட்டுமாதர்களும் அவர் களைக்கண்டு ஆச்சர்யமடைகின்றார்கள்.

இங்கிலாந்தில் இப்பொழுது மாதர்கள் புருஷர்க ளைப் போலவே பார்லிமெண்ட் மெம்பர்களாக வேண்டு மென்று அதி மும்மரமாக உழைக்கின்றார்கள். இதின் பொருட்டு அநேக மாதர்கள் சட்டத்தினால் தண்டிக்கப் பட்டுக் காராகிருகமுஞ் சென்றிருக்கிறார்கள். இம் மாதர்கள், தங்கள் கணவன்மார்கள், சகோதரர்கள், தந்தைமார்கள் முதலிய ஆண்மக்கள் பார்லிமெண்ட் சபைக்கு மெம்பராக வருவதின் பொருட்டு அங்கங்கே ஜனங்களைத் தங்கள் பிரசங்கங்களினால் தூண்டி அன்னவர்களைப் பார்லிமெண்ட் மெம்பர்களா கச் செய்கின்றார்கள். இற்றைக்கு ஆங்கிலேயமாதர்க ளில் ராண்டல்ப் சர்ச்சில் சீமாட்டியும், ஹம்பிரிவார்ட் என்னும் சீமாட்டியும் இங்கிலாந்தில் அதிக மேன்மை யுடன் இராஜதந்திர முதலியனவைகளையும் நன்கு பரி

சோதிக்கின்றார்கள். மேனாடு இத்தன்மை யடைவ தேன்? கல்வி கேள்விகளிலும், வியாபார ஒழுக்கங்களி லும் அதிக மேன்மை பெற்றிருந்த இந்தியாவானது இற்றைக்குச் சகல வழிகளையும் துறந்து பரிதாப நிலையுடனிருப்பதேன்! மேனாடுகள் நாகரிகமின்றி மிரு கப்பிராயமா யிருந்த காலையில் இந்நாடானது நாகரிகந் தழைத்துப் பெருமையுடன் இறுமாந்திருந்த தன்றோ? சகலவிளைபொருள்களுக்கும் உற்பத்தி ஸ்தானமாயும், சிறந்த பட்டு பீதாம்பர வஸ்திரங்களுக்கு உறைவிட மாயும், கற்பக விருட்சம்போன்ற இந்நாடு கற்பகத்தின் அமிர்தத்தைப் பானம் பண்ணாது "காக்கைகயிற்கனிது களம் பழம்" என்றவாறு நம்நாட்டுத்திரவியத்தை யழி க்கவந்த பரதேசவஸ்துக்களின் பாசந்தானென்னே? மேனாடுகள், இடைவிடாமல் முயற்சித்துவந்ததினால் சகல நாட்டார்களும் அந்த நாடுகளின்மேல் பொறாமை கொள்கின்றார்கள். மேனாடுகள்சீர்பெற்றதும், மேன் மையடைந்ததும் அவைகளின் ஒழுக்கமும், ஒத்து மையுமே. இப்பரதகண்டத்திலும் இந்துமாதர்கள் மனு, பராசரர்களின் ஸ்மிருதியினால் சுதந்தரத்தை யடைவது டன் இவர்களுக்குரிய ஸ்திரீதனத்தைப் புருஷர்கள் அடைய ஆதாரமில்லையென்றும் மேற்கூறிய ஸ்மிருதி கள் கூறுகின்றன. ஆனால் மத்தியகாலங்களில் இந்திய நாடு அடைந்த கலகத்தினாலும், குழப்பத்தினாலும் மாதர்கள் சுதந்தரத்தைப் பெரும்பாலும் இழந்தார்கள்.

இவர்கள் இழந்த சுதந்தரத்தையே இப்பொழுது மறு படியும் பெறமுயலுகின்றூர்கள். மாதர்கள் அவிவேகி களாயிருக்கும்வரையும் வெளியில்வராமல் கோஷாக்க ளாகவே யிருக்கும்வரையும், இயற்கைக் குணத்திற் குரிய சுகத்தையும் உரிமையையும் வரிக்கார்கள். மா தர்களுக்கு கல்வி கற்பித்துவரின் அவர்கள் புருஷர்க ளோடு கலந்து நாட்டிற்கும் நாட்டிலுள்ளோர்க்கும் உழைப்பார்கள். ஸ்திரீகள் புருஷர்களைவிட புத்தி யில் குறைந்தவர்களா? ஸ்திரீகள், நிதானத்திலும், சாந்தத்திலும், சுத்தத்திலும் புருஷர்களை விட உயர் ந்தவர்கள். மாதர்கள் முற்காலத்தில் புருஷர்களை விட அதிக மேன்மையாக அரசு புரிந்து வந்தார்கள். ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களில் மாதர்கள் சகல வழிகளையுந் நாடிப்பொதுஜன ஊழியர்களாக யிருக்கின்றூர்கள். ஐரோப்பாகண்டத்தில் மாதர்கள் விர்த்தியை யடைந்தது அவர்களின் கல்வியினுலேயே.

கல்வியானது இவர்களுக்கு இன்றியமையாதது. ஆண்பிள்ளையைப் படிப்பித்தால் அவன் ஒருவனே படிப் பாளியாகிருன். பெண்பிள்ளையைப் படிப்பித்தால் ஒரு படித்த குடும்பமாகிறது. ஆதலால் குடும்பத்தில் படிப்பு விர்த்தியாவது மாதர்களின்பொருட்டே. மாதர்களி ஞல் குடும்பங்கள் உயர்ந்து நாகரிகத்தை யடைகின்றன. குடும்பங்கள் விர்த்தியடைந்தால் கிராமங்கள் விர்த்தி யடையும். கிராமங்கள் விர்த்தியடைந்தால் பட்டணங்

கள் விர்த்திபடையும், பட்டணங்கள் விர்த்தியடைந் தால் மாகாணங்கள் விர்த்தியடையும். மாகாணங்கள் விர்த்தியடைந்தால் நாடெங்கும் விர்த்தியடையும். இவ்வளவு விர்த்திக்கும் மாதர்களன்றோ காரணம். ஆனது பற்றியே, மாதர்கள் படித்துப் பொது விஷயங்களில் ஊக்கத்துடன் உழைக்கவேண்டும். இந்தியாவில் மகம்மதிய அரசாட்சியில் டெல்லிமாநகரில் ஆண்டுவந்த சுல்தான் ஆல்டமாஷ் என்பவனின் மகளான ராஜியாபீகம் என்பவள் அரசுசெலுத்திவந்தாள். ஜிஹான்கீர் மனைவியான நூர்ஜிஹான் என்பவளின் இராஜதந்திர முதலியவைகளைக்கண்ட ஜிஹான்கீர் அவள் பெயரினலேயே நாணயங்களை முத்திரை யடித்தான். தற்காலமிருக்கும் போபல்-மகாராணியை முற்காலத்திற்கூறிய மகம்மதீய மகாராணியென்றே கூறலாம். இவர் தன்னுட்டில்மாதர்கள் பொருட்டுக் கல்விச்சாலைகள் முதலானவைகள் ஏற்படுத்தியிருக்கிறார். இதுடன் தற்காலம் நடைபெறும் ஐரோப்பிய யுத்தத்திற்குத் திரவிய உபகாரமுஞ் செய்திருக்கிறார். 18-வது நூற்றாண்டில் ஹோல்கார் இராஜ்ஜியத்தை அரசாண்டு வந்த மாதர்மணியான அஹல்யாபாய் நாடெங்கும் புகழச் செங்கோல் செலுத்திவந்தாள். அமெரிக்காவில் அடிமைத்தனத்தை யொழித்த ஹாரியட்பீசர் ஸ்டோவி என்பவளும், சிறைச்சாலையில் அவதிப்படும் கைதிகளைச் சீர்திருத்தின எலிஜபெத்ப்ரை பெருமாட்டியும் ஸ்திரீகளே யொழிய புரு

ஷர்களல்லர். அதினாலேயே திரள் திரளான மாதர்கள் பற்பல தேசங்களில் பொது நன்மையின் பொருட்டு உழைத்திருக்கிறார்கள்.

போபல் மகாராணியார் தன் சமஸ்தானமாகிய போபல் இராஜ்ஜியத்தைச் சீர்திருத்த முயன்று, அந் நாட்டிலுள்ள மாதர்களைப்பொது நலப்பிரியர்களாகச் செய்தனர். இவர் மகம்மதிய மதத்தைத் தழுவினராயினும், மற்ற மகம்மதிய மாதர்களைப் போலிராமல், அதிக சுதந்தரத்தையும், பொறுப்பையும் பெற்றிருக்கின்றார். இவர் இராஜ்யபாரஞ் செய்வதில் அதிக தேர்ச்சியுள்ளவர். வெகு இராஜ தந்திரி. ஆடவர்களும் பிரமிக்கத் தக்க இராஜ தந்திர சாகஸத்தையுடையவர். வெகு தயையுள்ளவர். இவரை யறியாதாருமுளரோ ?

இங்கிலாந்தில் டப்ரின் ராணியுட்ஸ்திரீகளுக்காகப் பற்பலபொதுச்சங்கங்களும், ஆஸ்பத்திரி முதலானவைகளுஞ் ஸ்தாபித்து அவைகளின் விர்த்திக்குப் பாடு படுகின்றார். இந்தியாவில் மேனாட்டு பாஷையைக் கற்று, சிறந்த கவியென்று பெயர் வாங்கின டோருடட் என்னும் தோருளாடட் என்பவளும், தற்காலம் இங்கிலாந்து முதலிய நாடுகளைத் தன் கவியால் வசப்படுத்தின ஸரோஜனி அம்மையும் நாட்டின் பொருட்டு உழைத்தது யாவரும் அறிந்த விஷயமே. டோருடட் என்பவள் தனது சிறுபிராயத்திலேயே இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகமேறினர். அவள்

ஸ்தானத்தை நமது ஸரோஜனி அம்மை வகித்துக் கொண்டு பலர் மெச்சும்படியாக வாழ்ந்து வருகின்ருள். ஸரோஜனி அம்மை, ஆங்கிலேயபாஷையில் கவி செய்வதில் வெகு திறமை யுள்ளவளென்றும், மேடைப் பிரசங்கத்திலும் இணையற்றவளென்றும் ஆங்கிலேயர்களே வெகுவாய்க் கொண்டாடியிருக்கின்ருர்கள். இவள் வங்காள மாகாணத்தைச் சேர்ந்தவள் எனினும், ஹைதராபாத்திலுள்ள டாக்டர் நாயுடுவை மணஞ் செய்து கொண்டாள். இவள் இந்நாட்டு நாரியர்களுக்கு நாகரிகத்தை நயமுடன் நன்கு போதிப்பதுடன் சுதந்தரத்தைப்பற்றியும் அடிக்கடி அவலம்பித்துவருகிருள். இவள் இப்பாரதமாதாவின் அருந்தவப் புதல்விகளில் ஒருவள். நாட்டையும், நாட்டிலுள்ளோர்களையும் கௌரவப் படுத்த வந்த கௌஸ்துபமணி. இந்திய ஸ்திரீகள் அவிவேகிகளென்னும், சுதந்தர மற்றவர்களென்றும், நாகரிகமற்ற முறட்டு ஜாதியைச் சேர்ந்தவர்களென்றும் நினைத்துக் கொண்டிருந்த ஆங்கிலேய ஸ்திரீபுருஷர்களை, நமது ஸரோஜனி அம்மை அவர்களுக்கு ஞானக்கொழுந்தென்னும் தீபத்தைக் காட்டி அஞ்ஞான இருளை நீக்கினள். காலஞ் சென்ற டோருடட் என்னும் தோருளாடட் என்பவளின் கவி விசேஷத்தினலும், ஸரோஜனி யம்மையின் கவிமேன்மையினலும், இந்திய நாட்டு மாதர்கள் கல்வி கேள்விகளிலும், நடையுடைபாவனைகளிலும்,

ஆசாரப் பழக்கங்களிலும் ஆங்கிலேயர்களைவிட உயர்ந்தவர்களென்று சகலரும் கூறத்தக்கதான பாக்கியத்தைப் பெற்றூர்கள். ஸ்திரீகள் இந்நாட்டில் தாழ்ந்த வகுப்பினைச் சேர்ந்தவர்கள் முதல் உயர்ந்த வகுப்பினைச் சேர்ந்தவர்கள் வரை ஒவ்வொருவர்களும் ஸம்ஸாரத்தைப் பற்றி நன்குணர்ந்திருக்கிறூர்கள். மேனுட்டு ஸ்திரீகளில் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு ஸம்ஸாரத்தின் வாசனையே தெரியாது. ஏனெனில், சம்பத்தின் விர்த்தியினுல், போகத்தில் ஈடுபட்டு ஒன்றையுங் கவனியாது கவலையற்று வசிக்கிறூர்கள். இந்தியாவிலோ, அரசன் மனைவியானுலும், தன் குடும்ப விஷயங்களைக் கவனிக்கவேண்டும். குடும்ப விஷயங்களைத் தெரியாமலும், அதை நிர்வகிக்காமலுமிருக்கும் மாதர்கள் வெளிவிஷயங்களையு மறியார்களென்பதாம்.

இந்திய ஸ்திரீகள், தங்கள் குடும்பங்களைக்காப்பாற்றி, வெகு ஜாக்கிரதையுடன் பரிபாலித்து வருவதினுலேயே, வெளிவிஷயங்களும் அவர்களுக்குச்சாதாரணமா யிருக்கின்றது. ஒரு குடும்பத்தை நிர்வகிக்கச் சக்தியற்றவள் பிரபஞ்சத்தில் அவள் என்ன செய்யமாட்டும்? குடும்பத்தைப் பரிபாலிப்பதில் தேர்ச்சியுள்ள ஒருவள் இராஜாங்கத்தைப் பரிபாலிக்கவுங்கூடும். குடும்ப விசாரணையை நன்கறியும் இந்திய மாதர்கள் ஒரு காலத்தில் சகல சம்பத்துடன் அரசு புரிந்

தும் வந்தார்கள். தற்காலம் இந்தியாவைச் சேர்ந்த பரோடா சமஸ்தான மகாராணியார் இந்திய மாதர்களுள் ஓர் திலகம் போன்றவர். இவர் தமது சகோதரிகளின் பொருட்டுச் சதா உழைக்குந் தன்மையுள்ளவர். இவர் மகாராஜாவைத் தூண்டித் தன்னாட்டில் பெண்களின் பொருட்டு அநேக கல்விச் சாலைகளும், தொழிற் சாலைகளும் ஸ்தாபித்திருக்கிறார், பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்கும், ஆண்பிள்ளைகள்போலவே கட்டாயப் படிப்பு வைக்கப் பட்டிருக்கிறது. பரோடாசமஸ்தானக்கல்விச் சாலைகளில் கல்விகற்கும் சிறுமிகள், தபயல்வேலை, சரித்திரம், சுராதாரம், வைத்தியம், முதலிய கல்விகளைக்கற்பதுடன் குடும்பகாரியத்திற்குரிய சமைத்தல், மனையலங்காரஞ் செய்தல், மக்களைப்போற்றுதல், ஏழைகளை ஆதரித்தல் முதலியவைகளையுங் கற்கின்றார்கள். இச்சமஸ்தானத்தில் ஆடவர்களும், பெண்டிர்களும் வித்தியாசமின்றி உயர்தரக் கல்வி கற்று வருவதினாலேயே பரோடா இராஜ்ஜியத்தை மேனாட்டு இராஜ்ஜியங்களிற்குச் சமானமாகக் கூறுகின்றார்கள். மகாராணியார் தஞ்சை மகராஷ்டிர குடும்பத்தைச் சேர்ந்தவராயினும், டாம்பீகமின்றி வெகு சரஸமாய் வாழக்கூடியவர்—வீண் செலவு என்பதைக் கண்டிப்பாய்க் குறைக்குந்தன்மையுள்ளவர். பரோபகாரசிந்தையே பரந்திருக்கும் சுபாவத்தைக் கூடியவர். ஜீவகாருண்யம், தயை, கொடை முதலிய குணங்

களுக் கிருப்பிடம். யாவருங் கண்டு களிக்கத்தக்க கமலவதனமுடையவர். மிக்க குணவதி—அதிலும் பாக்கியவதி. இவர் சதா தனது சகோதரிகளின் உயர்ச்சியைக் கவனித்துக் கொண்டு மேன்மேலும் உழைக்கின்றார். இத்தகைய புண்ணியவதிகளினலன்றோ நம் நாடு இற்றைக்கும் மாறாப் புகழையடைகின்றது. இவர் மாத்திரமல்ல. புனநகரில் காலஞ்சென்ற மகராஷ்டிர வம்சதிலகமான மகாதேவ கோவிந்த ரானடேயின் மனைவியும், பெண்களின் பொருட்டுச் சிறந்த காரியங்களைச் செய்துவருகின்றார். இவர் அனுதாரவான பெண்களுக்கும்,நாதனற்ற விதவாஸ்திரீகளுக்கும். ஸேவஸாதன் என்னும் மடத்தை ஸ்தாபித்துக்கல்வி, தையல், சங்கீதம், குடும்பப் பொறுப்பு முதலியவைகளைக் கற்பித்து வருகின்றார். ஸேவஸாதன் மடத்தைச் சேர்ந்த ஒவ்வொரு மாதர்களும், பரோபகாரச்சிந்தையுள்ளவர்களாய், நாட்டையும், நாட்டிலுள்ளோர்களையும் நல்வழிப் படுத்த விரதம் பூண்டு உழைக்கின்றார்கள். பம்பாயிலுள்ள இந்த ஸேவஸாதனத்தில் கற்கும் சிறுமிகளுக்கு மேறகூறிய ஸாதனத்தின் பெண் மெம்பர்கள் ஒவ்வொருவர்களும், வாரத்திற்கொருமுறை சுகாதாரம், தேகசுத்தி, ரணசிகிச்சை, மருத்துவச்சித் தொழில், ஸ்திரீகுழந்தைகளுக்குண்டாகும் வியாதிகள் முதலிய இதர உபயோகமான வழிகளை ஒரு மணி நேரம் கற்றுக் கொடுக்கக் கடமை பட்டிருக்கி

றார்கள். இதல்லாமல், அடிக்கடி குடும்ப செட்டு முதலி யவைகளும், பொதுஜன நன்மையின் பொருட்டுச் செய்யவேண்டிய வழிகளும் முறையே உபந்நியாச பூர்வமாக நடத்தப் பட்டு வருகின்றது. "பரோபகாரார்த்தம் இதம் சரீரம்." என்ற ஆன்றோர் வாக்கியத்தைக் கடைப் பிடித்து ஒவ்வொரு மாதர் மெம்பர்களும் ஸாதனத்தில் உழைக்கின்றார்கள். அனுதரவுள்ள சிறுமிகளையும், பால விதவைகளையும், கஷ்டத்திலிருக்குமிதர ஸ்திரீகளையும், இவர்கள் கவனித்து வருகின்றார்கள். இதல்லாமல், ஸேவஸாதனத்திற்கு வெளியில், அதாவது பொது ஸ்தலங்களில் பெண்கல்வியைப்பற்றி உபந்நியஸித்து, கல்விச்சாலைகளுக்குச் சென்று கல்வி கற்கலாகாதென்ற வழக்கமென்னுங் கொடிய விரதம் பூண்டிருக்குங் குடும்பங்களிலுள்ள மாதர்களுக்கு வீடு தோறுஞ் சென்று கல்வி கற்பித்து வருதல் முதலிய வற்றையும் புரிந்து வருகிறார்கள். ஆனது பற்றியே, மற்ற பாகங்களிலுள்ள மாதர்கள் தங்கள் வகுப்பாரை உயர்த்தப் பாடுபடவேண்டும். மாதர்கள் தங்கள் பொறுப்பையும், கடமையையும் அறிந்து, கல்வி யென்னுங் குழந்தையை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வருவார்களாயின் இந்நாட்டு மாதர்கள் மேனாட்டு மாதர்களையும் மிஞ்சி சிறந்த நாரீமணிகளாவதுடன், இந்நாடு வளமையையும், சுதந்தரத்தையும், சுகத்தையும் அனுபவிக்குமென்பதற்கு ஐயமேயில்லை.

# 2. WOME'NS CULTURE

## 2. மாதர்களின் பூஷணம்.

---

இந்தத் தேசத்துப் பெண்கள், கல்வியில்லாமை யினுல் அஞ்ஞான இருளில் ஆழ்ந்திருக் கிருர்களென்பது யாவர்க்குந் தெரிந்த விஷயம். பெண்க ளுக்குக் கல்வி அவசியமென்பதைச் சிலர் ஒப்புக்கொண் டாலும் அனேகர் பெண்கள் படித்து என்ன உத்தியோ கஞ்செய்யப் போகிருர்களென்றும், அவர்கள் படித்தால், புருஷர்களுக்கு அடங்கி நடவாமல் வித்தியா கர்வத்தி ஞல் கெட்டுப்போவார்களென்றும் துராக்ஷேபனஞ் செய்கிருர்கள். தெய்வ பக்திபும், விசுவாசமும், நற் குணங்களும் உண்டாவதற்காகக் கல்வி கற்பதேயல் லாது உத்தியோகமே செய்வதற்கன்று. நெல்லுக் கிறைக்கிற தண்ணீர், புல் முதலிய பூண்டுகளுக்கும் உபயோகமாவது போலவும், பழத்திற்காக வைக்கும் விருட்சம் நிழல் முதலியவற்றிற்கும் உபயோகமாவது போலவும், புத்தியின் அபிவிர்த்திக்காகப் படிக்கப்படுங் கல்வி உத்தியோக முதலியவற்றிற்குஞ் சாதன மாகிற தே தவிர படிப்பதற்கு உத்தியோகமட்டுங் காரண

மென்று சொல்வது புத்தியீனமாயிருக்கின்றது. சரீரத்திற்கு ஆகாரம் எப்படியோ, அப்படியே கல்வியானது புத்திக்கு மிகவும் அவசியமாக யிருக்கின்றது. நாளுக்குநாள் வளர்கின்ற சரீரத்தைப் பகவான் நமக்குக் கொடுத்திருந்தாலும் அதற்குத் தகுந்த ஆகாரங்களைக் கொடுத்துச் சௌக்கியத்துக் கடுத்த காரியங்களையெல்லாம் நாமே தேடிக் கொள்ளாவிட்டால் சரீரம் வளரமாட்டாது. அப்படியே, கடவுள் நம்மை ஞானத்மாவாகச் சிருஷ்டித்தாலும் நம்முடைய சுபாவஞானம் போதாமலிருப்பதால் கல்வி என்கிற ஆகாரத்தைக் கொடுத்துப் புத்தியை அபிவிர்த்தி செய்யவேண்டியது நம்முடைய கடமையாயிருக்கின்றது. நம்முடைய மனம் எப்படிப்பட்டதென்றால், ஒரு கணப்பொழுதாயினும் சும்மாயிராமல் பூமண்டலம், ஆகாய மண்டல முழுவதும் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றது. நாம் சும்மாயிருந்தாலும், வேலை செய்தாலும், படுத்திருந்தாலும், நித்திரை செய்தாலும் தன்னுடைய சஞ்சாரத்திற்கு எப்பொழுதும் ஓய்வில்லை. தனக்குக்களைப்புமில்லை, இளைப்புமில்லை என்னும் இத்தன்மையது. இப்படிப்பட்ட மனத்துக்குக்கல்வியென்கிற துணைவனில்லா விட்டால், கடிவாளமில்லாத குதிரைபோலவும், கண்டபடி திரியும் குரங்குபோலவும், கரைகடந்த வெள்ளம் போலவும், கட்டுக் கடங்காக்காளைபோலவும் அது தேசமெல்லாந்திரிந்து நம்மைத் துர்க்குணமாகிய காட்

டிலும், மேட்டிலும் இழுத்து முடிவில் ஆழ்ந்த பள்ளத்தில் தள்ளிவிடுமென்பதற்கு எள்ளளவும் சந்தேகமில்லை. இந்தக் காரணத்தைப்பற்றியே ஆண்பிள்ளைகள் உத்தியோகஞ்செய்ய விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அவர்களுக்குப் படிப்பிப்பது வழக்கமாயிருக்கின்றது. பெண்களுடையமனமும், புருஷர்களுடைய சித்தமும், ஒரே தன்மையனவாயிருப்பதால், பெண்களுக்குமட்டுங் கல்வியைப் போதியாவிட்டால், அவர்களுடைய சித்தம் எப்படி நன்மார்க்கத்தில் நிலைகொள்ளும்? மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் எவ்வளவு பேதமோ, அவ்வளவு பேதமுண்டு கற்றவர்க்குங் கல்லாதவர்க்கும் என்று திருவள்ளுவ நாயனார் சொல்வதுபோல் ஆண்பிள்ளைகளுக்குள் படித்தவனுக்கும் படியாதவனுக்கும் உள்ள பேதத்தை நாள்தோறும் காண்கிறோம். படித்தவன் கூடியவரையில் தன்னுடைய படிப்பிற்குத் தகுந்த புத்தியும், நல்லொழுக்கமும், யாதாமொரு மானஜீவனஞ் செய்யத்தகுந்த திறமையும் உள்ளவனாயிருக்கிறான். படியாதவனோவென்றால் பரமசுண்டனாய், கொலை, கன்னம், களவு, சூதாடல், மதுபான முதலிய குற்றங்களைச் செய்பவனா யிருக்கிறான். ஆடவர்களுக்குள் கற்றவனுக்கும் கல்லாதவனுக்கும் ஏணிவைத்துப்பார்க்கும்படியான இவ்வளவு வித்தியாசமிருக்கும் பொழுது பெண்களுக்கு மட்டும் படியாமலே சகல சுகணங்களும் உண்டாகுமென்று நினைப்பது

வின். படியாத ஸ்திரீகள் கடவுளது கிருபையால் இவ்வளவாவது நல்லவர்களாயிருப்பதற்கு நாம் ஆச்சரியப்படவேண்டியதைவிட்டு அவர்களில் சிலர் துர்க்குணமுள்ளவர்களாயிருப்பதற்கு ஆச்சர்யப்படயிடமேயில்லை. கல்லாத ஸ்திரீகள் விவேகிகளாயிருப்பது எவ்வளவு ஆச்சர்யமென்றால், முடவர்கள் ஆடவும், குருடர்கள் அந்த ஆட்டத்தைப் பார்த்து சந்தோஷிக்கவும், ஊமைகள் பாடவும், செவிடர்கள் அந்த பாட்டைக் கேட்டு மகிழவுங் கண்டால் எவ்வளவு அதிசயமோ, அவ்வளவு அதிசயந்தான்.

பெண்கள் கல்வி கற்பதினால், அவர்களுச்குப் பதிவிரதா தர்மம் முதலிய சுகணங்கள் அதிகரித்துப் புருஷன்மேல் உண்மையான பக்தியும், விசுவாசமும் உண்டாகுமே தவிர, அவர்கள் ஒருநாளும் புருஷத்துரோகிகளாகமாட்டார்கள். புருஷர்களில் சிலருக்குக் கல்வி கற்கும் நற்குணமுண்டாகாமலிருப்பது போல, ஸ்திரீகளிலும் சிலர் வித்தையை அப்பியஸித்தும் பிரயோசனமடையாமற் போனாலும் போகலாம். அக்காரணத்தைக் கொண்டு ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிக்கக்கூடாதென்று சொல்வது முற்றும் பொருத்தமில்லாததாக யிருக்கிறது. ஒருவன் தன் பெண்சாதிக்குக் கண்ணிருந்தால், அன்னிய புருஷர்களைப் பார்ப்பாளென்று கண்ணில்லாத குருடியைக் கலியாணஞ் செய்து கொள்ள சம்மதிப்பானா? சில சமயங்களில் பிள்ளைக்குத்

தாய், பால் கொடுக்கும்போது பால் புரையேறிப் பிள்ளை இறந்து போவதினால் பிள்ளைக்குப் பால் கொடுக்கக் கூடாதென்று சொல்லலாமா? சகல பிராணிகளுக்கும் ஜீவாதாரமா யிருக்கிற மழை, வெயில், காற்று முதலியன சில சமயங்களில் சிலருக்குச் சேதத்தை யுண்டு பண்ணுவதினால் மழை முதலானவைகள் வேண்டாமென்று ஆணையிட்டுக் குறிக்கலாமா? அப்படியே வித்தியாப்பியாசத்தினால் ஆயிரத்திலொரு ஸ்திரீ அகங்காரங் கொண்டு கெட்டுப் போனாலும், அதனால் மற்ற ஸ்திரீகளையும் படிக்கக்கூடாதென்று விலக்குவது யுக்தமல்ல. மத்திய கால வெயில் மஞ்சள் நிறமாகத் தோன்றுவது காமாலைக் கண்ணின் குற்றமேயல்லாது வெய்யிலின் குற்றமல்ல. சர்க்கரை கசப்பது வாய்க்குற்றமேயல்லாது சர்க்கரையின் குற்றமல்ல. குறுணி மையிட்டாலுங் குருட்டுக் கண் நல்ல கண்ணாகாது போல், சிலர் கல்விகற்றும், சீர்திருந்தாமலிருப்பது சுபாவ துர்க்குணமே தவிர, கல்வியால் வந்த குற்றமென்று சொல்வது மதியீனம். நல்ல கல்வியை யுணருகிற ஸ்திரீயினுடைய கற்பானது திருந்தி வளருமல்லாது, கெட்டுப்போமென்று சொல்வது சாகும் உயிரை நீடித்திருக்கச் செய்யும் தேவாமிர்தத்தை மனிதர்கள் புசித்தால் இறந்துபோவார்களென்று சொல்வதற்குச் சமானமென்று நீதி நூல்கள் சொல்லுகின்றன. சர்வலோககர்த்தாவும், சர்வாந்தர்யாமியும், மனோ

வாக்குக்கெட்டாதவரும், நித்திய பொருளுமாகிய பக வானைக் கல்வி அறிவினால் அறியலாமே யல்லாது வேறொன்றினாலும் அறியமுடியாது. நம்மை ஞானாத்மாவாகப் படைத்து, எண்ண முடியாத நன்மைகளை யும் சுகபோக போக்கியங்களையும் நமக்குத் தந்தருளிய பரம தயாள மூர்த்தியைக் கற்றறிந்த ஞானிகள் உணர் வார்களேயன்றி கற்றறியா மூடர்கள் எங்ஙனம் உணர்வார்கள்? பூகோளம், அண்டசாஸ்திரம் முத லிய நூல்களைப் படியாவிட்டால் கடவுளுடைய பெரு மையும் சர்வ சக்தியும், மகிமைப்பிரதாபமும் ஸ்திரீ களுக்கு எப்படி விளங்கும்? சுவாமியினுடைய மகி மையை யறியாத ஸ்திரீகளுக்கு அவர்மேல் எப்படி பக்தியுண்டாகும்? அக்ஷரரூபியாயிருக்கிற வேத விதி களையும் நீதி சாஸ்திரங்களையும், படித்தறியாத பெண் கள் எப்படி நல்வழியில் நடக்கக்கூடும்? ஸ்திரீகள் படியாவிட்டால் யானையையும் மலையையும் பார்த்த குருடர்கள் கதையாகவல்லவோ முடியும்? ஆகையி னால் கல்வி கற்காத பெண்களுக்கு ஈஸ்வரபக்தியும், பிரமஞானமும் உண்டாவது அசாத்தியமல்லவா? குருமார் முதலானோர் சொல்லுகிற சாதாரணமான பிரசங்கங்களைக் கூட கல்லாத ஸ்திரீகள் அர்த்தங் கண்டு பிடிக்கமாட்டார்கள். அவர்கள் செய்கிற அர்த்த மெல்லாம் அநர்த்தமே. அவர்களுக்குப் பெரியவர்கள் சொல்லுஞ் ஞானப்பொருளோ தாலாட்டாக முடிகி

றது. புருஷர்களே! ஸ்திரீகள் இப்படிப்பட்ட ஸ்தி தியிலிருப்பது தானோ உங்களுக்குச் சந்தோஷம்? கல் விக்குத் தெய்வமாகிய சரஸ்வதியைப் பெண்ணென்று சொல்லுகிற இந்தத் தேசத்தார்கள் பெண் ரூபமாயிரு க்கிற கல்வியைப் பெண்கள் படிக்கக்கூடாதென்று சொல்வது பூர்வோத்தர விரோதமாயிருக்கிறது. உல கத்திலிருந்த பல கல்விமான்கள் பற்பல காலங்களில் பற்பல விஷயங்களைப்பற்றி அவர்களுடைய ஆயுளெல் லாம் செலவழித்துக் கிரந்த ரூபமாகப் பற்பல விஷயங்களைச் செய்திருக்கிறார்கள். அவைகளுக்கே கல்விஎன்று சொல்லப்படுவது. அப்புஸ்தகங்களைப் படிக்கிறவர்கள் அத்தனை வித்வான்களுடைய புத்தி யையும், ஞானத்தையும் சுலபமாகக் கிரகித்துக் கொ ள்ளுகிறார்கள். இப்படிப்பட்ட பரம பிரயோசனத் தைப் புருஷர்கள் மட்டும் அடைவது தான் நியாய மோ? பெண்களையும் அடையச் செய்வது நியாய மல்லவோ?

பெண்கள் படிப்பது பூர்வீக சம்பிரதாயமல்ல வெ ன்பதாகச்சிலர் துர்வாதஞ்செய்கிறார்கள். பாட்டனும், தகப்பனும் படியாத மூடர்களாயிருந்தால், பிள்ளைக ளும் மூடர்களாகயிருக்கவேண்டுமா? தகப்பன் உத்தி யோகஞ் செய்யாமலிருந்தால் பிள்ளையும் உத்தியோ கஞ் செய்யக்கூடாதா? பிராமணர்கள் வேதம் ஓது தலையன்றி மற்றொரு தொழிலையுஞ் செய்யக்கூடா

தென்றும், அப்படியே மற்ற வர்ணத்தார்களும் தங்கள் தங்களுக்குரிய தொழில்களைச் செய்ய வேண்டுமென்றும் மனு நீதியிற் சொல்லப்பட்டிருக்க, இப்பொழுது பிராமணர்கள் வேதத்தை உபேக்ஷையாக விட்டுவிட்டு மற்ற வர்ணத்தார்களுடைய தொழில்களைச் செய்ய வில்லையா? வேதபாராயணத்திற்குப் பிரதியாகச் சட்டப் பாராயணமும், வைதிக ஜீவனத்திற்குப் பதிலாக லௌகிக ஜீவனங்களும் செய்கிறார்கள்; கலப்பை ஆயுதத்தைக் கொண்டு பூமியை உழுது கிருஷித் தொழில் செய்ய வேண்டியவர்கள் இறகு என்கிற ஆயுதத்தைக்கொண்டு கடிதமாகிய பூமியை உழுது ஜீவனஞ்செய்ய வில்லையா? இங்லீஷ்காரருடைய ராஜரீகத்தில் நாள்தோறும் சீர்திருத்தத்தையும், நாகரிகத்தையும் அடைந்துவருகிற நாம், ஸ்திரீகளுடைய பாவத்தைக் கட்டிக்கொள்வதற்காக பட்டும், அவர்கள் விஷயத்தில் பூர்வீக வழக்கத்தை அனுசரித்து, அவர்களை அஞ்ஞானக் கடலில் அமிழ்த்துவானேன்? பெண்கள் படிப்பது புராதன வழக்கமல்லவென்று சொல்வது சுத்த பிசகு. திருவள்ளுவருடைய சகோதரிகளாகிய ஔவை, உப்பை, உருவை, வள்ளியம்மை, முதலானவர்கள் கல்விகற்று அநேக பிரபந்தங்களைச் செய்ய வில்லையா? சைவர்களுடைய பெரிய புராணத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட நாயன்மார்களில் ஒருவராகிய காரைக்காலம்மையும், வைஷ்ணவர்களுடைய குரு

பரம்பரைப் பிரபாவத்திற் கூறப்பட்ட ஆழ்வார்களில் ஒருவராகிய ஆண்டாள் என்னும் சூடிக்கொடுத்த நாச்சியாரும், பெண்களாயிருந்துங் கல்வி கற்று அநேகம் ஸ்தோத்திரப் பாடல்களைச் செய்ய வில்லையா? அன்றியும், சீதை, திரௌபதி, சந்திரமதி, தமயந்தி, சகுந்தலை முதலானவர்களும் மற்றுஞ் சில ரிஷி பத்தினிகளும், பாண்டியன் மனைவியும், கம்பர்வீட்டு வெள்ளாட்டியும், படித்தவர்களென்பது, பஹிரங்கமாகத் தோன்றுகிறது. பூர்வகாலத்தில் கார்கி, மைத்திரேயி முதலான ரிஷிபத்தினிகளும் தத்துவ முதலியவைகளில் தங்கள் கணவன்மார்களுடன் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். இக் காலத்திலும் சிற்சில நகரங்களில் வசிக்கிற ஸ்திரீகளும் படித்தவர்களென்பது ஜகப்பிரசித்தமாயிருக்கின்றது. நாலடியார், காரிகை முதலிய நூல்கள் மகடூஉ முன்னிலையாகச் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் திருக்குறள், நாலடியார், காசிகாண்டம் முதலிய நூல்களில் பெண்களுக்கிருக்க வேண்டிய கற்பு இலட்சணம் முதலிய குணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் புருஷர்களைப்போலவே, பெண்களும் படிப்பதற்காகவே இந்நூல்கள் செய்யப்பட்டனவென்பது கரதலாமலகமா யிருக்கின்றது. பெண்கள் படிக்கக் கூடாதென்பது மேற்படி கிரந்த கர்த்தாக்களுடைய சித்தாந்தமா யிருந்தால் அவர்கள் மகடூஉ முன்னிலையாகப் பாடவும், கற்பு இலட்சணங்களைப் பேசவும் நிமித்த மில்லை.

" குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யாமென்னு நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு"

என்று சொல்லி யிருப்பதால், மயிரழகும், மஞ்சளழகும் அழகல்ல, கல்வி யழகே அழகு என்பது தெளிவாய்த் தோன்றுகிறது.

குஞ்சி என்பது ஆண் மயிராதலால் மயிரழகை வேண்டுமானால் புருஷர்கள் எடுத்துக் கொள்ளட்டும். சேலைகட்டுவதும், மஞ்சள் பூசுவதும், பெண்களுக்குரிய அழகாதலால் அந்த அழகு தங்களுக்குரியதென்று புருஷர்கள் சொல்லத் துணியார்களென்று நம்புகிறோம். ஆகையால் பெண்கள் படிக்க வேண்டுமென்பது மேற்படி நூலாசிரியருடைய கருத்தென்று பட்டப்பகற்போல் வெளியாகிறது. பெண்களுக்குக் கல்வி கற்பிக்கக் கூடாதென்று ஒரு நூலிலும் விலக்கப் படவில்லை. கணக்கும், எழுத்தும் கண்களுக்குச் சமானமென்று பொதுவாகப் பல வித்வான்கள் பாடியிருக்கிறார்கள்.

'எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்'

என்று ஔவையும்,

" எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழுமுயிர்க்கு"

என்று திருவள்ளுவ நாயனருஞ் சொல்லியிருக்கிறூர்கள்.

"கண்ணுடைய ரென்பவர் கற்ருேர், முகத்திரண்டு புண்ணுடையர்கல்லாதவர்" என்ற குறளில் கற்றவர்களே கண்ணுடையவர்கள், சல்லாதவர்கள் முகத்திரண்டு புண்ணுடையவர்களென்று திருவள்ளுவநாயனர் ஸ்திரீபுமான்களுக்குப் பொதுவாகச் சொல்லுகிருரேயல்லாமல் புருஷர்களுக்கு மட்டும் சொல்லவில்லை. குருடனைச் செந்தாமரைக் கண்ணன் என்பது போலும், அஷ்ட தரித்திரம் பிடித்தவளை அன்னபூரணி என்பதுபோலும், படியாத பெண்களுடைய கண்களை நீலோற்பலமென்றும், வண்டென்றும், மானென்றும், மீனென்றும், மற்ற வித்வான்கள் எவ்வளவுதான் வர்ணித்தாலும் நாம் ஒருநாளும் ஒப்பமாட்டோம். புண்ணென்றேசாதிப்போம். ஏனெனில் திருவள்ளுவருக்குமற்றப் புலவர்கள் அஜகஜாந்திரமல்லவா? கல்வி என்னும் ஔஷதப் பிரயோகஞ் செய்து மேலே சொல்லப்பட்ட புண்களைக் கண்களாக்காதவரையில் நாம் நம்முடைய கக்ஷியை விடோம். "கற்பு" என்கிறபதத்திற்குக் கல்வி யென்று அர்த்தமாகிறபடியால், பெண்களுக்குக் கற்புவேண்டுமானல் கல்வியும் வேண்டுமென்பது அந்தப்பதத்திஞலேயே விளங்குகிறது. ஸ்திரீயும், புருஷனும் ஒரு தேகமென்பது சர்வமத சம்மதமானதால், புருஷன்மட்டும்

படித்துப் பெண்சாதி படிக்காம லிருப்பது பாதியுட லிற் பிராணனும், பாதியுடலில் பிராணன் இல்லா மலுஞ் செய்கிற பாரிஸவாயுபோலும், பாதி யுடலை அலங்கரித்துப் பாதி யுடலை அலங்கரியாமல் விடு வதுபோலு மிருக்கிறது. பெண்கள் படித்தால் அவர் களுக்குச் சகல விவேகமு முண்டாகுமானதால் அவ ர்கள் புருஷர்களுக்கு மந்திரிகளைப்போலச் சமயத்தில் புத்தி சொல்வார்கள். காரியஸ்தர்களைப்போலக்கிரக கிருத்தியங்களை எல்லாம் நடப்பித்துக் கொள்வார் கள். கணக்கர்களைப் போல வீட்டைச் சேர்ந்த கணக்குகளை எல்லாம் எழுதிக் கொள்வார்கள். தாய் போலப் புருஷர்களைச் சம்ரக்ஷிப்பார்கள். காவற் காரரைப்போல வீட்டுப் பண்டங்களை எல்லாம் காத் துக்கொள்வார்கள். நல்ல சுயம்பாகிகளைப்போலப் புரு ஷர்களுடைய நாவுக்கிதமான பக்ஷணங்களைச் செ ய்து கொடுத்து உபசரிப்பார்கள். வைத்தியர்களைப் போலப் புருஷர்களுடைய தேகசௌக்கியங்களுக் கடுத்த காரியங்களைத் தேடிச் செய்வார்கள். சங்கீத வித்வான்கள்போல இன்பமான பதங்களைப் பாடியும், இங்கிதமான வார்த்தைகளைப் பேசியும், புருஷர்களு டைய வருத்தங்களைத் தீர்ப்பார்கள். உத்தம சிநேகி தர்களைப் போலப் புருஷர்களுடைய ஆபத்துக்கு உதவுவார்கள். புருஷர்கள் பிசகி நடந்தால் அவர் களுக்குக் குருவைப்போல உபதேசஞ் செய்வார்

கள்; பெண்களுக்குப் படிப்பில்லாமையினுல் இவ்வளவு நன்மைகளேயும் புருஷர்களிழந்து போவது எவ்வளவு மதியீனம். இப்பொழுது பெண்கள் படியாதவர்களாயிருப்பதினுல் புருஷர்கள் தங்களுடைய தொழிலேச் சேர்க்க வெளி வேலேகளுடன் கூட, வீட்டைச்சார்ந்த காரியங்களேயும் வகித்துக்கொண்டு இரண்டு குதிரைகள் சட்டியிருக்கவேண்டிய வண்டியை ஒரு குதிரைமட்டும் இழுப்பதுபோலத் தாங்கள் சிரமப்படவேண்டியதாயிருக்கிறது. பெரிய குடும்பங்களில், அநேக பந்துக்களும், பிள்ளைகளும், வேலேக்காரர்களும் இருக்கிறபடியால் அடிக்கடி கலகங்களும், மனஸ்தாபங்களும் உண்டாகும். குடும்பத் தலேவி படியாத அவிவேக சிரோன்மணியா யிருந்தால், அவள் அந்தக் கலக சங்கடங்களே நிவர்த்திசெய்யவும், மற்றவர்களுக்குப் புத்தி கற்பிக்கவும், எங்ஙனம் சாத்தியமாகும்? குருடனுக்குக் குருடன் வழிகாட்டவும், முடவனுக்கு முடவன் சிலம்பங் சுற்றுக்கொடுக்கவுங் கூடுமா? நிரக்ஷரகுக்ஷியாயிருக்கிற தலேவியானவள் வேலேக்காரர்கள் செய்கிற திருட்டுகளேயும், புரட்டுகளேயும், மோசங்களேயுங் கண்டுபிடித்துப் பொருட்சேதமில்லாமல் குடும்பத்தை எட்படி பராமரிக்கக் கூடும்? "மூடன் ஆஸ்தி முழுதும் நாஸ்தி" என்பதுபோலப் பெண்களுக்குப் படிப்பில்லாமையினுல், திரவிய நஷ்டம் சம்பவிக்கவும் இடமுண்டாகின்றது. பெண்கள்

படித்திருந்தால் அவர்கள் வீட்டு வேலைகள் செய்கிற நேரம்போக மற்ற நேரங்களில் நல்ல புஸ்தகங்களை வாசித்துத் தங்களுடைய புத்தியை அபிவிர்த்தி செய்யவும், குழந்தைகளுக்குப் படிப்பிக்கவும், தக்கவர்களாயிருப்பார்கள். அப்படியில்லாமையினால் ஸ்திரீகள் வீண் பேச்சும், வம்பு வார்த்தைகளும், கோளும், புறணியும் பேசித் துர்மார்க்கங்களைக் கற்றுக்கொள்கிறார்கள்.

சிறு குழந்தைகளுக்குத் தகப்பனைவிடத் தாய்மார்களிடத்தில் அதிகப் பழக்கமிருப்பதினால், பிள்ளையாரைப் பிடித்த சனியன் அரசமரத்தையுங் கூடப் பிடித்ததுபோலப் படிப்பில்லாத தாய்மார்களுடைய அறியாமையுந் துர்குணமும் பிள்ளைகளையுஞ் சாரும்படியாயிருக்கின்றது. புருஷர்களைப் பார்க்கிலும் பெண்களுக்கு அதிக அவகாசமான நேரமிருப்பதால் அவர்கள் படித்தவர்களாயிருந்தால், ஔவை முதலானவர்களைப்போல அநேக பிரபந்தங்களை யுண்டுபண்ணவும், நூதனமான காரியங்களைக் கண்டுபிடித்துச் செய்யவும், அதனால் இந்தத் தேசம் ஐரோப்பா தேசத்தைப் போலச் சீக்கிரத்தில் நாகரிகம் அடையவும் இடமுண்டாகுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கவில்லையா? பிள்ளை பெற்றவளைப் பார்த்து மலடி பெருமூச்சு விட்டதுபோல, ஐரோப்பா தேசத்து நாகரிகத்தைப் பார்த்து நாம் பெருமூச்சு விடவேண்டி

யதே யல்லாமல் பெண்கள் கல்வி கற்காதவரையில் நம்முடைய தேசம் திருந்தவே மாட்டாது. பெண்களுடைய கல்வியினுல் புருஷர்களுடைய கல்வியும் அதிகரிக்குமென்பது திண்ணம். எப்படியென்ருல், பெண்கள் தங்களைக் கல்வியில் வெல்லாமலிருக்கும் பொருட்டும், பரிகாசஞ் செய்யாமலிருக்கும் பொருட்டும், புருஷர்களுக்குக் கல்வியில் அதிக கவனமும், முயற்சியும் உண்டாகுமென்பதற்கு ஐயமில்லை. கல்வி கற்காத பெண்கள் எவ்வளவு அழகுள்ளவர்களாயிருந்தும் அவர்களுடைய அழகானது எட்டி பழுத்தது போலும், எருக்குப் பூத்தது போலும் சுத்த நிஷ்பிரயோசனமாயிருக்கின்றது. உயிரில்லாத மண்பாவைக்கு நகைகள் பூட்டினுற்போல, கற்காத பெண்களுக்குண்டாகிய அழகினுல் பிரயோசன மென்ன? அவர்களது வார்த்தைகள் புத்திமான்களுக்கு எள்ளளவுங் கேட்கச் சகிக்காமல் கர்ணகடோரமாகயிருக்கிறது. அவர்களிடத்தில் பேசினுல் நமக்கிருக்கிற புத்தியும் மழுங்கிப் போ மென்று பயப்படவேண்டியதாயிருக்கின்றது. சில புருஷர்கள் தங்கள் பத்தினிகள் எவ்வளவோ சுந்தரமுள்ளவர்களாயிருந்தும், அவர்கள் படியாதவர்களாயும் மதுரமான சம்பாஷணை செய்யத்தகாதவர்களாயு மிருப்பதால் "வீட்டுப் பெண்சாதி வேம்பும், நாட்டுப் பெண்சாதி கரும்பும்" என்பதுபோல சொந்த ஸ்திரீகளை விட்டு விட்டு அழகில் மூதேவிக்கு

மூத்தாளாயிருக்கிற தாசிகள் பாதமே கதி என்று ஓடு கின்றார்கள். தாசிகள் கல்விகற்று மதுரமாய்ப் பேசுவ தே இதற்குக் காரணமா யிருக்கிறது. பெண்கள் கல்வி கற்றிருந்தால் அவர்கள் அழகில்லாதவர்களாயிருந்தா லும் அவர்களைப் புருஷர்கள் விரும்புவார்க ளென்ப தற்கும், பெண்களுடைய கல்வியானது, புருஷர்கள் தாசிகள் வீட்டுக்குப் போகிறவழியை யடக்கு மென் பதற்கும் இதுவே சாட்சியமாகும். ஒரு புருஷனுக்குத் தன் பெண்சாதிமேல் சந்தேகமுண்டாகி அவளைக் கண்டித்துத் 'தலைமண்டையுள்ள வரையில் சோர நாய கனைச் சேருகிறதில்லையென்று சத்தியம் பண்ணும்படி கேட்டானும். அவள் புருஷனுக்குத் தெரியாமல் ஒரு மண்டை ஓட்டை யெடுத்துத் தலைமேல் வைத்துக் கொண்டு தலைமண்டையுள்ள வரையில் வியபிசரிக்கிற தில்லை என்று பிரமாணஞ் செய்து கொடுத்துப் பழைய படியே நடந்துவந்தாளாம். இப்படிப்பட்ட மூர்க்க ஸ்திரீகளுடைய கற்பைப் புருஷன் தடி எடுத்துக் கொண்டு காக்கவேண்டியதுதான். பெண்கள் படித் தால் அவர்களுடைய கல்வியே கற்புக்குக் காவலாயிரு க்குமென்பது நிச்சயம்.

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யும்; மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை"

என்று திருவள்ளுவ நாயனர் சொல்வது உண்மையென்

றோ? புருஷர்கள் அயலூருக்குப் போயிருக்கும்பொழுது அவர்கள் அனுப்புகிற அந்தரங்கமான கடிதங்களைப் பெண்டுகள் வாசிக்கத் தெரியாமையினால் அன்னிய புருஷர்களிடத்திற் கொடுத்து வாசிக்கச் சொல்வதும், அவர்களைக் கொண்டே பதில் எழுதுவதும் வழக்கமாயிருக்கின்றது. பொருளுக்குத் திருடனைக் காவல் வைத்ததுபோலவும், கிளிக்குப் பூனையையும், பசுவிற்குப் புலியையும் துணைவைத்தது போலவும், ஸ்திரீ புருஷர்களுடைய அந்தரங்கங்களை அன்னிய புருஷர்கள் அறிவது எவ்வளவு பிரமாதமான காரியம்? படித்திருந்தால் அவர்கள் சுயமாகக் கடிதங்களை வாசிக்கவும், மறுமொழி எழுதவுங் கூடுமாயிருக்குமல்லவா? ஸ்திரீகள் படித்தால் புருஷர்களுக்கு அடங்கமாட்டார்களென்று சிலர் சொல்லும் ஆக்ஷேபத்திற்குச் சமாதானஞ் சொல்லுகிறோம். பக்ஷி எவ்வளவு உயரப்பறந்தாலும் ஆகாசத்திற்கு உட்பட்டிருப்பது போல, ஸ்திரீகள் எவ்வளவு படித்தாலும், புருஷர்களுக்குத் தாழ்ந்தவர்களே தவிர மேற்பட்டவர்களல்ல. சிருஷ்டிக் கிரமத்தில் ஸ்திரீயைப் பார்க்கிலும் புருஷன் சிரேஷ்டனென்பதற்கு அநேக சாக்ஷியங்கள் உண்டு. சகல மதஸ்தர்களும் தெய்வத்தை ஆண்பாலாகப் பேசுகிறார்களேயல்லாது பெண்பாலாக ஒரு நாளும் பேசுகிறதில்லை. கடவுள் முதல் முதல் புருஷனை உண்டு பண்ணிப் பிறகு ஸ்திரீயை உண்டுபண்

ஷினதாகச் சகல மதஸ்தர்களும் நிராக்ஷேபமாக அங்கீகரிக்கின்றார்கள். சரீர பலம், தைரியம், பராக்கிரமம், விவேகம், அறிவு முதலிய சாமர்த்தியங்களில் ஸ்திரீகளைப் பார்க்கிலும் புருஷர்கள் விசேஷித்தவர்களென்பது நிஸ்ஸந்தேகமாயிருக்கின்றது. சில ஸ்திரீகள் மேற்கண்ட சாமர்த்திய விஷயங்களில் சில புருஷர்களுக்கு மேற்பட்டிருந்தாலும் இருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட சாமர்த்தியமுள்ள பெண்களையும், புருஷர்களையும் எண்ணிப்பார்க்குமிடத்தில் புஜபல பராக்கிரமும், புத்திநுட்பமும், விவேகமும் உள்ள புருஷர்களுடைய தொகை அதிகரிக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. இராஜர்கள், மந்திரிகள், பிரதானிகள், தளகர்த்தர்கள், படைவீரர்கள் முதலிய சகல அதிகாரிகளும், மற்ற உத்தியோகஸ்தர்களும், புருஷர்களே தவிரப் பெண்கள் அல்ல. இங்கிலீஷ் தேச முதலிய சில தேசங்களில் தவிர இதர தேசங்களிலெல்லாம் பெண்கள் பட்டாபிஷேகத்திற்கு அநருகர்களென்று திரஸ்கரிக்கப்படுகின்றார்கள். இங்கிலீஷ் தேசத்தில்கூட இராஜ குடும்பங்களில் புருஷ சந்ததியில்லாமற்போனால் மட்டும் ஸ்திரீகளுக்குப் பட்டங்கட்டலாமென்கிற விதி யிருக்கின்றது. சத்துருக்களுடன் யுத்தஞ்செய்து செயித்தல், துஷ்ட நிக்கிரகம் சிஷ்ட பரிபாலனஞ் செய்தல், சட்ட சாஸ்திரங்கள் உண்டுபண்ணுதல், பாலம் இருப்புப்பாதை முதலியவைகளைக் கட்டுதல்,

ஆறு, குளம், ஏரி முதலியவைகளை வெட்டுதல், காடு வெட்டிக் கரம்பு திருத்திப் பயிரிடுதல், தேசாந்தரங் களிலும், தீபாந்தரங்களிலும் சென்று வியாபாரங்கள் செய்தல், நாட்டிலும், காட்டிலும், கடலிலும், கரையி லும் பலவிதமாகப் பாடுபடல் இவை முதலிய தேச நன்மைக்குரிய சகல காரியங்களும் புருஷர்களால் நடத்தப்படுகின்றனவே யல்லாமல் பெண்களாலல்ல. அவர்களுக்குச் சகஜமான துர்ப்பலம், அதைரியம், பேதமைத்தனம், நாணம், அச்சம் முதலிய குணங்க ளாலும், கர்ப்பம், பிரசவம் முதலிய துன்பங்களா லும் அவர்கள் கஷ்டமான தொழில்களுக்கும் மற்ற உத்தியோகங்களுக்கும் அசக்தர்களென்பதை அவர் களே நிர்வாதமாக ஒப்புக்கொள்ளுவார்கள். ஒரு தேசத்துக்கு இரண்டு அரசர்களிருந்தால் தேசகாரி யம் எப்படி சரியாக நடக்கமாட்டாதோ அப்படியே ஒரு குடும்பத்திற்கு இரண்டு எஜமான்களிருந்தால் குடும்பகாரியம் ஒருபொழுதும் செவ்வையாக நடக்க மாட்டாது. ஆகையால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரே யஜமானனிருக்கவேண்டியது முக்கியம். சரீர சக்தியிலும், புத்தியிலும், வித்தையிலும், தேசகாரி யங்களை நடப்பிக்குந் திறமையிலும், குடும்ப சம்ர க்ஷணை செய்வதிலும், விசேஷசமர்த்தர்களானபுருஷர் களே யஜமானத்துவத்திற்கு யோக்கியர்களானதால் ஸ்திரீகள் தெய்வத்துக்குப் பயந்து நடப்பதுபோலப்

புருஷர்களும் பயந்து நடக்கவேண்டுமென்பது வேத வாக்கியமாயிருக்கின்றது. அவள்மேல் புருஷன் அதிகாரஞ்செலுத்தவும் அந்த அதிகாரத்திற்கு அவள் உட்பட்டிருக்கவும்வேண்டும். அவள் எவ்வளவு படித்திருந்தாலும் புருஷனுக்கு அடங்கி நடக்கவேண்டிய வளேயல்லாது, அதிக்கிரமிக்கக்கூடாது.

மானுட ஜன்மமெடுத்த ஆண் பெண் அனைவருக்கும் வித்தியா பூஷணமே பூஷணம். ஏனெனில் வித்தையினாலேயே சகல பாக்கியங்களு முண்டாகின்றன. வித்தையினால் சற்பாத்திரமும், சற்பாத்திரத்தினால் தனமும், தனத்தினால் தர்மமும், தர்மத்தினால் மோக்ஷமுமுண்டாகின்றது. படித்த பெண்கள் நகைகள் முதலானவைகளை வீணில் அலங்கரிக்கச் சம்மதியார். படியாத ஸ்திரீகளே சகல துன்பங்களுக்கும் பாத்திரமாகிறார்கள். படியாத ஸ்திரீகளுடைய அறியாமையால் தங்களைப் பல சித்திராக்கினைகளுக்கு உட்படுத்திக் கொள்ளுகிறார்கள். நியாயாதிபதிகள் குற்றவாளிக்குக் கால்விலங்கு மட்டும் போடுகிறார்கள். ஸ்திரீகளோவென்றால், உலக்கைக்குப் பூண்கட்டினதுபோல, பாடகம், பாதசரம், தண்டை, சிலம்பு, கொலுசு முதலிய பல கால்விலங்குகளையும்; காப்பு, தோடா, வளையல், கங்கணம் என்று பெயர்கொண்ட பல கை விலங்குகளையும், முத்துமாலை, சந்திரஹாரம், கண்டசரம் முதலிய பல கழுத்து விலங்குகளையும்; தலை சிங்காரமென்று பெ

பர் பெற்றத் தலை விலங்குகளையும், ஒட்டியாணமென்று சொல்லப்பட்ட இடுப்பு விலங்கையும், மோதிரங்களாகிய விரல் விலங்குகளையுந் தரித்துக்கொள்ளுகிறார்கள். காதுகளிலும், மூக்குகளிலுஞ் சல்லடைக்கண்கள்போலப் பல துவாரங்களைச் செய்து பல நகைகளை மாட்டிக் கொள்ளுகிறார்கள். அஞ்ஞானவடிவமாகிய ஸ்திரீகளுடைய தேகங்களையும், ஞானோபதேசந் நுழையாத அவர்களுடைய காதுகளையும், பல விலங்குகளிட்டுச் சிக்ஷிப்பதுங் கிரமந்தான்: புஸ்தகங்களைப்பாராத கண்களையும், வாசிக்காத வாயையும், விலங்கிட்டுச் சிட்சியாமல் வெறுமையாய் விட்டு விட்ட காரணந் தெரியவில்லை. பூர்வீகத்தில் ஒருவன் குற்றவாளியென்று தெரியும்படி அவனுடைய நெற்றியில் அரசர்கள் பச்சை குத்தி விடுவது வழக்கமாம். இந்தக்கொடிய தண்டனையையும், ஸ்திரீகள் தங்களுக்குத் தாங்களே செய்து கொள்ளுகிறார்கள். ஸ்திரீகள் நெற்றியிலுங் கரசரணுதிகளிலும் பச்சைக் குத்திக்கொள்ளும் பொழுதும், தேகத்தில் பல ஆபரணங்களைத் தரித்துக்கொள்ளும் பொழுதும், உண்டாகிற உபத்திரவத்தைச் சகிக்கமாட்டாமல் பல்லைக் கடித்துக்கொண்டும், முகத்தைச்சுளித்துக்கொண்டும், அழுத கண்ணுஞ் சிந்தின மூக்குமாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட உபத்திரவத்தை யனுபவிக்கும்படி அவர்களை யார் அடித்தார்கள்? சுயமாகவே அழகுள்ளவர்களுக்குப் பூட்டப்பட்ட நகைகள்

அவர்களுடைய அழகை மறைக்கின்றன. அழகுக்கு அழகுசெய்வார் யார்? அழகில்லாதவர்களுக்குத் தரிக்கப்பட்ட நகைகள் அவர்களுடைய அங்கவிகாரத்தை அதிகமாயெடுத்துக் காட்டுகின்றன. ஸ்திரீகளுக்குக் கல்வியென்கிற ஞானபரணங் கிடைத்தால் ரத்நாபரணங்களென்று சொல்லப்பட்ட துன்பத்திற்குரிய விலங்குகளை அவர்களே வெறுத்துத் தள்ளுவார்களென்பது உண்மையே. இவர்கள் மேற்கூறிய நகைகளைச் செய்து அலங்கரித்துக் கொள்ளுவதினலேயே கள்ளர்களும், வழிபறி கொள்ளைக்காரர்களும் பிரபலமாகிறார்கள். நகைகளின் பொருட்டுக் குறிவைத்துவரும் இப்பாதகர்கள் ஸ்திரீகளின் தேகத்தைக் கொலை முதலிய தீமைகளையுஞ் செய்கிறார்கள். ஆனது பற்றியே மாதர்கள் இந்நகைகளைப் பூஷணமாகப் பரிபாலிப்பதைவிட வித்யா பூஷணத்தைப் பரிபாலிப்பின் அவர்கள் க்ஷேமப் படுவதுடன், அவர்கள் வயிற்றில் உதிக்குங் குழந்தைகளும் நன்மைபட்டுப் பரோபகார முதலிய பொது விஷயங்களில் ஈடுபட்டு உழைப்பார்கள். ஆகையால் நம் நாட்டுப் பெண்மணிகள் நகைகளைப் பெரிதும் பாராட்டாமல் கல்வியைப் பாராட்டுதல் நலம்.

---

# 3. WOMEN'S DUTY.

## 3. மாதர்களின் ஸ்வதர்மம்.

தெய்வபக்திக்குப் பின்பு புருஷபக்தி விசேஷ மென்பதும், ஸ்திரீகளுக்குச் சகல பாந்தவ்யங்களினும் புருஷ பாந்தவ்யமே உத்கிருஷ்ட மென்பதும், யாவரும் அறிந்த விஷயமே. இதற்குத் திருஷ்டாந்தமாக மாதர்கள் கலியாணமான உடனே தன்னுடைய தாய், தந்தை, சகோதரர் முதலியவர்களையும், பிதுரார்ஜிதங்களையும் விட்டுவிட்டுப் புருஷனுக்கும் அவனுடைய திரவியங்களுக்கும் உரியவளாவதே போதுமான சாக்ஷியமாயிருக்கின்றது. ஆகையால் பர்த்தாவிடத்தில் பூர்ண நேசம் வைக்க வேண்டியது பத்தினியினுடைய மாறாத கடமையா யிருக்கின்றது. பர்த்தா விற்குக் கீழ்ப்படிந்து அவனுடைய இஷ்டப்பிரகாரம் நடக்கிற பத்தினிக்குச் சர்வாபீஷ்டமும் நிர்விக்கினமாய்ச் சித்திக்குமென்பது சத்தியமே. உலகம் ஒன்றைக் கொடுத்து மற்றொன்றை வாங்குகிற வர்த்தகர்களுக்குச் சமானமாயிருப்பதால் நமக்கு மரியாதை வேண்டுமானால் நாம் மரியாதையைக் கொடுத்து மரியாதையை வாங்கவேண்டும். நமக்கு ஒருவனுடைய பிரியம் வேண்டுமானால் நாம் பிரியத்தைக் கொடுத்து பிரியத்

தை வாங்கவேண்டும். அப்படியே ஒரு ஸ்திரீ, புரு ஷனிடத்தில் எவ்வளவு விசுவாசம் வைக்கிறளோ அவ்வளவு விசுவாசம் புருஷனிடத்திலிருந்து அவளு க்குங் கிடைக்கும். கிரமமான சகல விஷயங்களிலும் புருஷனுடைய அபீஷ்டப் பிரகாரம் பெண்சாதி நடந் தால் அவளுடைய அபீஷ்டப் பிரகாரம் புருஷனும் நடப்பான். ஆகையால் குடும்பத்திற்குப் புருஷன் யஜமானயிருந்தாலும் அவனுக்கும் பிரியமாக நடக் கிற பெண்சாதியின் சொற்படி புருஷன் கேட்பானுத லால் அப்படிப்பட்ட பெண்சாதி ஒரு பக்ஷத்தில் புரு ஷனுக்கு எஜமானியாயிருக்கிறள். இது ஸ்திரீயி னுடைய வணக்கத்திலும், இணக்கத்திலும் வரு கிற மேன்மையல்லவா? சில சமயங்களில் நிஷ்காரண மாய்ப் பெண்சாதியைப் புருஷன் கோபித்துக் கொண் டாலும் அதற்குப் பிரதியாகப் புருஷனைப் பெண்சாதி கோபிக்க எள்ளளவும் அதிகாரமில்லை. பெண்ஜாதி எப்பொழுதும் வீட்டிற்குள் இருப்பவளாதலாலும், அவளுக்குப் புருஷனைத் தவிர வேறே எஜமானன் இல் லாத படியாலும், அவள் அந்த ஒரு யஜமானனுச்குத் திருப்தியாக நடப்பது எளிதாயிருக்கின்றது. புரு ஷன் எப்படிப்பட்ட அந்தஸ்துடையவனுயிருந்தா லும் அவன் பல யஜமானன்களும் பல பேருடைய விரோதங்களும் பல கஷ்டமான தொழில்களும் உடையவனுகையால், தன்னை அறியாமல் அவனுக்குக்

கோபம்வரக் காரண மிருக்கின்றது. அச்சமயமறிந்து பத்தினி ஒதுங்கவேண்டியது கிரமம். பிரசண்ட மாருதம் ஓங்கி வீசும்பொழுதும் அதி வேகமாய் ஜலப் பிரவாகம் வரும் பொழுதும் வளையாமல் எதிர்த்து நிற்கின்ற பெரிய விருட்சங்கள் வேரோடு சாய்ந்து வீழ்கின்றன. அச்சமயத்தில் நிமிராமல் வளைந்து கொடுக்கிற சிறிய செடிகளுக்கு ஒரு அபாயமுமில்லை. அப்படியே ஸ்திரீகளும், புருஷர்களுக்குக் கோபம் வரும்பொழுது எதிர்த்துப் பதில் சொல்லாமல் சமயானுகுணமாக ஒதுங்குவதே உத்தமஸ்திரீகளின் கடமை. ஸ்திரீகள் எவ்வளவு நன்மையாக நடந்தாலும் அதற்கு அனுசரணையாக நடவாமல் ஸ்திரீகளுக்குக் கொடுமை செய்கிற சில புருஷர்களும் உண்டு. இப்படிப்பட்ட நிர்ப்பாக்கியமான ஸ்திரீகளுக்குத் தெய்வஞ் சகாயஞ் செய்ய வேண்டுமேயல்லாமல் வேறுசகாயமில்லை. கைவிரலே கண்ணைக்குத்தினால் கையை என்ன செய்யலாம்? நம்முடைய பற்களே நம்முடைய நாவைக் கடித்தால் பற்களை உடைக்கலாமா? கப்பலேறின பின்பு கடல் யாத்திரைக்குப் பயந்து காரியமென்ன? ஸ்திரீக்குப் புருஷனைத்தவிர வேறுகதி யில்லாதபடியால் தன்னால் கூடிய வரையில் புருஷனுக்குத் திருப்தியாக நடக்க வேண்டியது ஸ்திரீயினுடைய கடமையாயிருக்கின்றது. புருஷன் எப்படிப் பட்டவனா யிருந்தாலும் தெய்வ பக்தியும், சாந்தமும், பொறுமையும்,

உண்மையும், அடக்கமும், வணக்கமும், கற்பு நெறியும் உள்ள ஸ்திரீகளுக்கு எந்நாளுங் குறைவில்லை.

எண்சாணுடம்பிற்குச் சிரசு பிரதான மாயிருப்பதுபோல் ஸ்திரீகளுக்குச் சகல குணங்களிலுங் கற்பு நிலையே முக்கிய ஆபரணமாக இருக்கின்றது. கற்புநிலை தவறுதவர்களுக்கு முகஅழகு இல்லாமலிருந்தாலும், கலியாணவீட்டுப் பூமாலைபோல அவள் யாவராலும் கனப்படுத்தப்படுவாள். கற்புநிலை கெட்டவள் அதிகசுந்தரியாயிருந்தாலும் அவள் சுடுகாட்டு மாலையைப்போல யாவராலும் இகழப்படுவாள். உலகத்தில் ஒருவனுக்குத் தீங்கு செய்கிறவன் அவனுக்குமட்டுந் துரோகியாகிறான். அன்னிய புருஷனைச் சேருகிற ஸ்திரீயோ பலபேர்களுக்குத் துரோகஞ்செய்கிறாள். அவள் தன்னையுங்கெடுத்து, அந்த அன்னிய புருஷனையுங்கெடுத்துத் தன்னுடைய சொந்த புருஷனுக்குத் துரோகியாகி அந்த அன்னிய புருஷனுடைய பத்நிக்கும் பெரிய துரோகியாகிறாள். அவளுடைய துர்மார்க்கத்தால் அவளுடைய புருஷனுக்கும் அன்னிய புருஷனுடைய பத்னிக்கும் உண்டாகிற சஞ்சலமும், பொறாமையும், கஸ்தியும், துக்கமும் அபரிமிதமல்லவா? அன்றியும், குலத்துக்கீனம் கோடாலிக்காம்பு என்பதுபோல் கற்புநிலை கெட்டவள் தன்னுடைய உற்றார், பெற்றார் முதலியவர்களுக்கும் தன்னுடைய புருஷன் வழிசுற்றத்தாருக்கும் மாறாத அவமானத்தையும்

இழிவையும், நிந்தையையும் உண்டுபண்ணுகிறாள். இந்த அநியாயமான உலகமானது அவள்செய்த குற்றத்திற்காக அவளுடைய புருஷனையும் பிள்ளைகளையும் அவமானப்படுத்தி நிரபராதிகளான அவர்களையுந் தண்டிக்கின்றது. மற்ற குற்றங்களெல்லாம் சிலகாலத்தில் மறைந்து போகும். வியபசார தோஷமோ உலகமுள்ளமட்டும் மறையாது. அந்த வியப்சாரி இறந்தாலும் அவளுடைய அபகீர்த்தி இறவாமல் என்றுஞ் சிரஞ்சீவி பட்டம் பெற்றுக் கொண்டிருக்கும். மற்ற குற்றங்களுக்கெல்லாம் ஒவ்வொரு பிராயச்சித்த முண்டு. ஒருவனுடைய பொருளைத் திருடினால் அதற்குச் சரியான பொருளைக் கொடுத்துத் திருப்தி செய்யலாம். அப்படியே நமக்குண்டாகிற நஷ்டங்களுக்கும் நாம் பிறகுச் செய்த தீங்குகளுக்குந் தகுந்த பரிகாரங்களைச் செய்யலாம். பதிவிரதா பங்கத்திற்கு ஒரு பிராயச்சித்தமும் இல்லை. கெட்டுப்போன கற்பு எட்டு நாள் அழுதாலும் வருமா? "அரைக்காசுக்கிழந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வருமா"? என்ற பழமொழியும் இருக்கின்றதே. ஸ்திரீகளுக்குக் காவலாகிய நாணத்தையும் மானத்தையும்விட்டு ஒருஸ்திரீ, பரபுருஷ சம்போகத்திற்கு எப்பொழுது உடன்பட்டாளோ அப்பொழுதே அவள் எப்படிப்பட்ட அக்கிரமங்களுக்கும் பின் வாங்கமாட்டாள். பாதிவிர்த்திய லோபம் பலபாவங்களை விளைவிக்கிற வித்தா யிருக்கின்றது.

எப்படியெனில், பர புருஷனைச் சேருகிற ஸ்திரீ அந்தக் குற்றத்தை மறைப்பதற்காகப் பல தந்திரங்களையும், பொய்களையும் உபயோகிப்பாள். அன்னிய புருஷனால் உண்டாகிற கர்ப்பத்தை அழிப்பதற்காக அவள் பல மருந்துகளை உண்டு கொலைபாதகத்தையுங் கட்டிக் கொள்வாள். அவள் சில சமயங்களில் தன் புருஷனைக் கொல்லவும் வழி தேடுவாள். காமவிகாரத்தைத் தூண்டிவிடுவதற்காக மது முதலிய லாகிரி வஸ்துக்களையும் அருந்துவாள். அவ்வஸ்துக்களை விலைக்கு வாங்கவும், பரபுருஷர்கள் பார்க்கத்தன்னை அலங்கரித்துக்கொள்ளவும், கையிற் பொருளில்லாவிட்டால் திருடவும் ஆரம்பிப்பாள். ஒரு பரபுருஷன் போலப் பல புருஷர்களைச் சேர்ந்து பொருள் சம்பாதிக்கவுந் துணிவாள். புருஷனும் பெண்ஜாதியும் ஜீவியகாலம்வரை அன்னியர்முகம் பார்க்கிறதில்லை என்று கலியாணகாலத்தில் தெய்வ சந்நிதியில் பிரமாண பூர்வமாக சங்கற்பஞ் செய்துகொள்ளுகிறார்கள். அப்பிரமாணத்தை உல்லங்கனஞ்செய்து, அந்நிய சம்போகம் பண்ணுவது மகாகொடிய பாவமாகையால் அப்படிபட்ட பாவிகள் மோக்ஷத்தை இழந்து நரகக் குழியில் விழுகின்றார்கள். இவர்கள் இம்மையிலும் மறுமையிலும் இகழப்பட்டு மாறாத் துன்பத்தை யடைகிறார்கள். நாட்டின்கண் எங்கும் கொலை, களவு முதலிய பஞ்சமா பாதகங்கள் இவர்கள் பொருட்டே உண்டாகின்றன. இவர்களி

ஞலே ஆக்கலும் அழித்தலு முண்டாகின்றன. நாட்டைக்கெடுப்பதும் நாட்டை உயர்த்துவதும் இவர்களே. ஆனதுபற்றியே ஸ்திரீகளே ஏற்றத் தாழ்ச்சிக் காரணமா யிருக்கின்ருர்கள்.

தாய் தந்தையருடைய முயற்சிக் குறைவினலும் கெட்ட பழக்கத்தினலும் அகிருத்தியங்களைக் கற்றுக் கொண்ட ஒரு துஷ்டையின் சரிதையைக் கவனிப்போம். பாவங்களுக்கெல்லாம் அவள் பண்டகசாலை. நன்மையெல்லாம் அவளுக்கு நஞ்சு. தீமையெல்லாம் அவளுக்குத் தேவாமிருதம். தப்புகளெல்லாம் அவளுக்குச் சர்வமானியம். வம்பு வார்த்தைகளெல்லாம் அவளுக்கு வாய்ப்பாடம். பொய்யிலே அவள் பூரணம். உண்மைபேசுவதில் அவள் ஊமை. புண்ணியமென்ருல் போராட்டம். குற்றங்களென்ருல் கொண்டாட்டம். சுயகுற்றங்களைப் பார்ப்பதில் அவள் சுத்தகுருடி. அன்னியர்குற்றங்களைப்பார்ப்பதில் அவளுக்கு ஆயிரங்கண். ஏழைகளுக்கும், அவளுக்கும் ஏழாம்பொருத்தம். பிக்ஷை கேட்டவரைச் சிக்ஷை செய்வாள். தானம் பரிதானமே யல்லாது வேறு தானமில்லை. பிராணத்தியாகமே யல்லாது வேறு தியாகமில்லை. எச்சிற்கையினலும் காகமோட்டாள். அறுத்தகைக்குஞ் சுண்ணம்புகொடாள். அவளுக்குக் கோயிலில்லை, குருவில்லை, பூஜையில்லை, புனஸ்காரமில்லை. பணமே தெய்வம். பணமே குரு. பணமே ஜீவனம். பணமே

பாவனம். கண்ணுடியில் தன் முகந்தெரிவது போல அவள் யாரைப்பார்த்தாலுந் தன்மயமாகத் தோனறுவதால் தன்குற்றத்தைப் பிறர்மேலேற்றி அவதூறுபேசுவதே அவளுடைய சுபாவகுணம். அவள் திருடியானதால் எல்லோரையுந் திருடிகளென்று சொல்வாள். அவள் பொய் பேசுகிறவளானதால் எல்லாரையும் வஞ்சிகளென்று தூஷிப்பாள். அவளுடைய வாய்க்குப் பூட்டு போட்டாலும் அவள் தூஷணை பேசாமலிராள் அவள் கால்களில் விலங்கிட்டு வைத்தாலும் அண்டை வீடுகள் போய்ச்சண்டை செய்யாமலிருக்கமாட்டாள். அவளுக்கும் அவள் புருஷனுக்கும் ஜன்மப்பகை. புருஷன் ஒன்று சொன்னுல் அவள் ஒன்பது சொல்வாள். அவன் வேண்டுமென்பதை அவள் வேண்டாமென்பாள். அவன் கிழக்கென்ருல் இவள் மேற்கு என்பாள். அவன் கறுப்பென்பதை இவள் வெளுப்பென்பாள். புருஷனுக்கு எது இஷ்டமோ அது அவளுக்கு அநிஷ்டம். புருஷனுக்கு யார் மித்திரர்களோ அவர்கள் எல்லாரும் அவளுக்குச் சத்துருக்கள். புருஷனுக்கு யார் சத்துருக்களோ, அவர்கள் எல்லாரும் இவளுக்கு இஷ்டர்கள். புருஷனே அவளுக்கு விஷமாயிருக்கும் போது புருஷனுடைய பந்துக்களை அவள் எப்படி மதிப்பாள். மாமிக்குத் தலைவலித்தால் இவளுக்குத் தலையில் கிரீடம்தரித்ததுபோலாகும். நாத்தனருக்குப் பிள்ளை பிறந்தால் இவளுக்கு ஒரு பிள்ளை

பிறந்ததுபோலாகும். ஓரகத்திக்கு ஒரு சுகம் உண்டானல், இவளுக்குத்துக்கம் சம்பவித்ததுபோல். அவள் கழுத்தில் தாலியிருப்பது இவள் கழுத்தில் தாலியில்லாதது போலாகும். அவளுக்கும், அவளுடைய பிள்ளைகளுக்கும் ஓயாத பெரும்பகை. பிள்ளைகளை அவளும் நேசிக்கிறதில்லை. தன் புருஷனையும் பிள்ளைகளையுமே பகைக்கிறவள் அந்நியர்களைப் பகைக்சாமலிருப்பாளா? அவளுக்கு ஊரெல்லாம் பகை. ஊரெல்லாம் அபக்கியாதி. எல்லாரும் அவளுடைய கேட்டை விரும்புவர்களே தவிர, க்ஷேமத்தை விரும்புகிறவர்கள் ஒருவருமில்லை. அவளுடைய மன அசுத்தம் எப்படியோ அப்படியே சரீர அசுத்தமும் உள்ளவளாயிருக்கிருள். அவளுடைய தேகத்தில் புஷ்பம்பட்டால் தேக நாற்றத்தைப் புஷ்பம் வாங்கிக் கொள்வதே யல்லாது புஷ்பவாசனை தேகத்தில் சாருகிறதில்லை. அவளுடைய தேகம் போலவே அவளுடைய வீடும் அசுத்தங்களுக்கு ஆலயமாயிருக்கின்றது. அசுத்தத்தில் ஜனிக்கிற பலபூச்சிகளும், புழுக்களும் அவளுடைய வீட்டில் புத்திர பௌத்திர களத்திராதிகளுடனே க்ஷேமமாய் வாழ்ந்துகொண்டிருக்கும். மேற்படி ஸ்திரீ துர்மார்க்கவதியாய்க்கெட்டுப்போனதற்கு அவளுடைய தாய் தகப்பன்மார்களின் அஜாக்கிரதையே முக்கியகாரணமானதால் ஸ்திரீகளுக்குப்டாலசிட்சை செய்வது அத்தியாவசியமாயிருக்கின்றது. தெய்வபக்தியே சகல

புண்ணியங்களுக்கும் அஸ்திபாரமாயும் சிகரமாயு மிருப்பதால் தெய்வபக்தியை முந்திப்போதிக்கவேண் டும். மேற்கூறிய துஷ்ட ஸ்திரீகள் ஆதிமுதற் கொண்டே, ஸகவாஸ சம்ஸர்க்கங்களினாலும், மாதா பிதாக்களின் நடவடிக்கைகளைப் பெரும்பாலும் தழு வுவதினாலும், இவர்களை நன்மார்க்கத்திற்குக் கொண் டுவருவது நாய்வாலை நிமிர்த்துவதுபோலாகும். எனி னும், நாம் நமது கடமையைச் செலுத்தவேண்டும். அவர்களுக்கு நம்மாலியன்றளவு நன்மார்க்கத்திற்குத் திருப்ப முயலின், இவர்கள் வரின் நமக்கும் அவர்க ளுக்கும் பெருமையைத் தரும். ஆனதுபற்றியே ஒவ் வொருவர்களும் ஸ்திரீகளைக் குழந்தைப்பருவந்தொட் டே நற்பழக்கத்திற்குக் கொண்டுவருதல் நலம்,

சிறுபிராயத்தில் தாய்தகப்பன்மார்கள் அடக்கி நன் மார்க்கத்திற்குக்கொண்டு வந்ததினால் நற்குணங்களிற் சிறந்த ஒரு ஸ்திரீயினுடைய குணாதிசயங்களை விவரிப் போம். அவள் புண்ணியப் பொக்கிஷம். பொறுமைக் கிருப்பிடம். ஞானக்களஞ்சியம். நற்குணபாத்திரம். கற்பலங்காரி. வினயசம்பூரணி. மாசில்லா மாணிக்கம். அவளைப் பார்த்தாலும் பசிதீரும். கண்டாலும் சுவி நீங்கும். அவள் பிராணன் போனாலும் ஒரு பொய் சொல்லத்துணியாள். பாவமென்றால் பாம்பைக்கண் டதுபோல் நடுங்குவாள். அவள் எந்த வேலை செய்தா லும் கடவுளுடைய தியானத்தை மறவாள். அவள்

எந்த உயிரையுந் தன் உயிர்போலக் கருதி உபகாரஞ் செய்வாள். கணவனுக்கு அற்பவருத்தமுமில்லாமல் குடும்பபாரங்களை எல்லாம் தானே தாங்கிக் கொள்வாள். குடும்பத்திற்கு வேண்டியபண்ட பதார்த்தங்களை எல்லாம் தக்க காலத்தில் சேகரித்து வைத்துக் கொள்வாள். தன் கணவன் வருமானமறிந்து செலவு செய்வாள். தன்னுடைய அந்தஸ்திற்குத்தகுந்த காரியங்களில் யாதொருகுறைவும் செய்யாள். தன் வீட்டுக் காரியங்களை வெளியிலேயேபேசாள். பிறர்பேரில் நிந்தையான வார்த்தைகளைத்தானும் பேசாள். பிறர் பேசவும் இடங்கொடாள், அவளுடைய உள்ளமெப்படி நிர்மலமோ அப்படியே அவளுடைய தேகமும் ஆடையும் எப்பொழுதும் பரிசுத்தமாயிருக்கும். அவளுடைய வீடு, பாத்திரம் முதலியவைகளைத் துலக்கி எப்பொழுதும் கண்ணாடிபோல் வைத்திருப்பாள். அசுத்தமென்பது மருந்திற்கு வேண்டுமானாலும் அவள் வீட்டில் அகப்படாது. அவள் குடித்தனப்பாங்கும் மரியாதையும் அற்புதம் அற்புதம் என்று யாவரும் மெச்சுவார்கள். அவள் வேலைக்காரர்களைப் பிரீதியாகவும் விவேகமாகவும் நடப்பிக்குந் நன்மையினால் அவர்கள் சகல வேலைகளையும் தாங்கள் உற்சாகத்துடன் செய்து முடிப்பார்கள். காமாதுரர்கள் அவளுடைய கற்பின் பெருமையை யறிந்து அவளுக்குப் பயந்து தீங்கு செய்யத்துணியார்கள். அவளுடைய கைப்பாகத்திற்கு

களபாகமும் ஈடல்ல. அவள் கைப்பட்டால் வேம்பும் கரும்பாகும். அவள் சமைத்தால் படிசாதம் உண்ணு வார்கள். அன்னத்துவேஷமுள்ளவர்களும் போஜனப் பிரியராவார்கள். தீராத்துரோகிகளும் சொஸ்தமடைந்து ஆரோக்கிய தேகமுடையராவார்கள். அவள் வீட்டுவேலைகளை எல்லாம் குறைவறச்செய்து முடித்த பின்பு நல்ல புஸ்தகங்களை எடுத்து வாசிப்பாள். சில நேரம் வீணைவாசிப்பாள். சிலநேரம், தையல் முதலிய சித்திர வேலைகளைச் செய்வாள். கணவனே அவர்களுக்குக்கதி. கணவனே அவளுக்கு நிதி. கணவனுடன் வாழ்வதே அவளுக்குப் பரமாநந்தம். கணவன் இருக்குமிடம் கானகமாயிருந்தாலும் அது அவளுக்குக்கனககருக்குச் சமானம். பெரிய நகரமாயிருந்தாலும் நாதன் இல்லாத இடம்பாழ். கணவனுடைய பக்ஷமே அவளுக்கு மோக்ஷம். அவளுக்கு என்ன துன்பம் வந்தாலும் கணவனுடைய கிருபாநோக்கம் பட்டால் அவளுடைய கஷ்டமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். அவளுக்கு எவ்வளவு பாக்கியமிருந்தாலும் கணவனுடைய கிருபைமட்டும் நீங்கினல், ஜலத்தை விட்டு நீங்கிய தாமரைபோலவும், நிலத்தைவிட்டு நீங்கிய பயிர்போலவும் வாடுவாள். கணவனுடைய மனமும், அவளுடைய மனமும் ஒன்றுயிருப்பதால் கணவனுக்கு எதில் விருப்பமோ அதிலேயே அவளுக்கும் விருப்பம். கணவனுக்கு எதில் வெறுப்

போ அதிலேயே அவளுக்கும் வெறுப்பு. கணவன் புசித்தால் அவளுக்குப்பசிதீரும். கணவன் சந்தோஷித்தால் அவளுக்குஞ் சந்தோஷ முண்டாகும். கணவனுடைய துக்கமே அவளுக்கும் துக்கம். புருஷனுக்கு ஆபத்து வருங்காலத்தில் அவளே அடைக்கலம். புருஷன் துக்கப்படுங் காலத்தில் அவளே சுகம், அவன் வியாதிப்படுங் காலத்தில் அவளே பரமசஞ்சீவி. தரித்திர காலத்தில் அவளே சௌபாக்கியம். கணவன் அழகில் அமாவாசைக்குச்சமானவனு யிருந்தாலும் அவனை அதிக ரூப சௌந்திரயமுள்ளவனுகப் பாவிப்பாள். அவன் தரித்திரனுயிருந்தாலும் குபேர சம்பத்துடையவனுக எண்ணுவாள். தான் பிரபுமகளாயிருந்தாலும் புருஷனுக்குத் தன்னை ஊழியக்காரியாக நினைப்பாள் 'கல்லானுலும் கணவன், புல்லானுலும் புருஷன், மரமானுலும் மணவாளன்' ஆதலால் புருஷனுக்கு எப்பொழுதும் சோடசோபசாரஞ் செய்வாள்.

புருஷன் ஒன்றுந் தெரியாத ஜடனு யிருந்தாலும் அவனுடைய வாக்கை வேதவாக்கியம்போலெண்ணுவாள். ஒரு விஷயத்திலும் கணவனுக்குக்கோபம் வரும்படி நடவாள். கணவன் நிர்நிமித்தமாய்க் கோபித்தாலும் பொறுமையுடன் சகித்துக்கொண்டு சமயம் பார்த்து அமிர்த வருஷம்போல் இன்பமான வார்த்தைகளைப்பேசிக் கணவன் கோபத்தைத் தணிப்பாள். அந்தக் குணவதியைவேருெரு ஸ்திரீ நோக்கி "உன்னு

டைய தசப்பனே தேசமாளுகிற அரசன், உன்னு டைய தாயோ அரசி, இப்படிப்பட்ட தந்தை தாய் களையும், [சகிமார்களையும் அரண்மனையையும்விட்டு நீங்கி ஒரு ஏழையை விவாசஞ்செய்துகொண்டு அவ னுடைய சிறுமனையில் வசிக்கும்படி உனக்கு லபி த்ததே என்று அனுதாபப்பட்டாள். அதைக்கேட்ட அந்தப் புண்ணியவதி என்னுடைய சணவர் வீடு சிறுவீடானதால் நான் எப்பொழுதும் அவருக்குச் சமீபத்திலிருக்கும்படியான பாக்கியம் பெற்றேன். அவர் ஏழையானதால் அவருடைய ஊழியங்கள் யாவும் என்னுடைய கைகளால் செய்யும்படியான அதிருஷ்டமும் எனக்குகிடைத்தது. விஸ்தீரணமான பல அரண்மனைகளும் பல ஊழியக்காரர்களுமுள்ள என்னுடைய தாய் தந்தைகளுக்கு இப்படிப்பட்ட பாக்கியம் இல்லாமையால் அவர்களுடைய செல்வம் பாழ்த்தது. பின்னும், என்னுடைய புருஷரே எனக்கு அரசர். அவருடைய சிறுகுடிசையே எனக்கு அரண்மனை. அந்த அரசருக்கு நானே குடி. அவரு டைய அன்பே எனக்குச் செல்வம். என்னுடைய கற்பே அவருக்கு நான் கொடுக்கும் கடமை என்று மொழிந்தாள். பணம், நகை முதலியவைகளின் மேல் அவளுக்கு எள்ளளவும் அபேக்ஷயில்லை. அவள் புருஷன் பார்க்கத்தன்னை அலங்கரித்துக் கொள்வதே யல்லாது மற்றவர் பார்க்கத்தன்னை அலங்கரித்துக்

கொள்ளாள். புருஷன் ஊரிலில்லாத காலத்தில் தன்னை அலங்கரிக்கவந்த தோழியை நோக்கி "நான் உண்பதும், புஷ்பம் சூடிக்கொள்வதும், சந்தோஷிப்பதும் அலங்கரித்துக் கொள்வதும் என்னுடைய கணவர் பார்ப்பதற்காகவேயன்றி மற்றபடியல்ல. இப்பொழுது என் கணவர் ஊரிலில்லை என்பது உனக்குத் தெரிந்திருந்தும் என்னை நீ அலங்கரிக்க வந்தது பேதமைத் தனம்" என்றாள்.

> 'உண்ணல் பூச்சூடனஞ்சு வத்தலேர்ப்பனை
> பண்ணலெல்லாமவர் பார்க்கவேயன்றே
> அண்ணறன் பிரிவினையறிந்துந் தோழி நீ
> மண்ணவந்தனையிதுமடமையாகுமே.'

என்பதை (நீதிநூல் புருடபாரியரியல்பு) என்பதினாலறிக. அவள் அன்னிய புருஷரை அறியாமலிருக்கிற அறியாமையையன்றி வேறு அறியாமை அவளிடத்தில் இல்லை. தான் புண்ணியவதியாயிருக்கத் தன்னைப் பாவி என்று அவள் சொல்லுகிற பொய்யைத் தவிர வேறு பொய் சொல்லியறியாள். பாவத்தின் மேல் அவளுக்குப் பகையே தவிர வேறொருவரிடத்திலும் அவளுக்குப் பகையில்லை. சிஷ்டர்களைப் பார்த்து அவர்களைப்போல் அபார யோக்கியதை நமக்கில்லையென்று அவளுக்குண்டாகிற பொறுமையைத்

தவிர வேறு பொருமை அவளிடத்தில் இல்லை. இவ ளைப்போலுண்டா வென்று சகல ஜனங்களும் சொல்லு கிற புகழ்ச்சிகளை அவள் சர்வ கொள்ளை யடிப்பதேயல் லாது வேறு திருட்டு அவளிடத்தில் இல்லை. பாத்திர மறியாமல் பிக்ஷையிடுகிற விஷயத்தில் அவள் செய் கிற லோபமே யல்லாமல் பாத்திரமறிந்து பிக்ஷ யிடுவதில் எள்ளளவும் லோபமில்லை. அவளும் அவளு டைய குடும்பத்தாரும் தர்மஞ் செய்வதில் ஒருவரை யொருவர் முந்திக்கொள்ளப் பிரயாசைபட்டுத் தர்ம நிமித்தம் செய்துகொள்ளுகிற சண்டையே தவிர வேறுசண்டை, மனஸ்தாபம், குரோதம் முதலிய துர்க்குணங்கள் அவர்களிடத்தில் இல்லை. ஜெகதீசனு டைய பாதாரவிந்தத்தையடைவதில் அவளுக்குப் பேராசையே தவிர வேறு பேராசை அவளிடத்தில் இல்லை. தன் கையிலில்லாத காலத்திலுந் தான் உண் ணும் அன்னத்தை ஏழைக்கிட்டுத் தன் வயிற்றுக்கு அவள் செய்யுந் துரோகத்தைத் தவிர வேறு துரோ கம் அவள் செய்வதில்லை. பாவத்தைச் செய்யாமலி ருப்பது மன்றி அதை நெஞ்சிலும் நினையாமல் மனோ வாக்குக்கிரியை மூன்றும் ஒரே தன்மையாயிருப்பாள். பாவஞ் செய்யாமற் புண்ணியஞ் செய்யவேண்டுமென் பது சர்வலோகநாயகனுடைய வேதவாக்கியமான தாலும் அந்த வாக்கியத்தை அசிரத்தை செய்யப் புரு ஷனுக்கு அதிகாரம் இல்லாமையினாலும் பாவஞ் செய்

யும்படி புருஷன் கட்டளையிட்டால் அந்தக் கட்டளையை மட்டும் நிராகரிப்பாளேயல்லாது மற்ற விஷயங்களி லெல்லாம் புருஷ வாக்கியப் பரிபாலனஞ் செய்யத்தவ றாள். தெய்வபக்தியுள்ளவர்கள் தெய்வத்திற்குரிய ஆல யம், பூஜா பீடம் முதலியவைகளிடத்திலும் சிரத்தை யுள்ளவர்களாயிருப்பதுபோல் புருஷபக்தியுள்ள அந் தச் சீமாட்டி தன் கணவனைப் பெற்ற தாய் தந்தை களைத் தன்னுடைய தாய் தந்தைகளிலும் அதிகமா யெண்ணி அவர்களுக்குப் பாதம் பணிந்து பணிவிடை செய்வாள். வார்த்திகதசையில் சரீரமெலிவினால் கோபம் வருவது சிலருக்குச் சாதகமானதால் தன்னு டைய மாமன், மாமி முதலானவர்கள் அகாரணமாய்ப் பேசி அவர்களுடைய கோபத்தைச் சாந்தப்படுத்து வாள். அவர்களும் எங்கள் மருமகள்போலுண்டா, இவளே எங்கள் கண்மணி, இவளே பெண்மணி, இவ ளே எங்களை வளர்க்கிறவள், இவளே எங்களைக் கரை யேற்றுகிறவள், இவள் தேடக்கிடையாத் திரவியம், காணக்கிடையாக் கற்பகம் என்று மகிழும்படி உபசரிப் பாள். கொழுந்தன்மார், நாத்தனார் முதலியவர்களைத்தன் னுடைய உடன்பிறந்தவர்களிலும் அதிகமா யெண்ணி அவர்களுடைய காலிற் பட்டது தன் கண்ணிற் பட்ட தாக நினைத்துப் பூர்ண பக்ஷங்காட்டுவாள். அவளும் அவளுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் நடக் கிற ஒழுங்கையும் மரியாதையையும் அவர்களுக்குள்

ளிருக்கும் நித்திய சமாதானத்தையும் மாறாத பட்சத்தையும் அதனாலுண்டாகிய ஆநந்தத்தையும் யோசிக்குமிடத்தில் அவளுடைய வீட்டைப் பூலோகமோக்ஷமென்று சொல்லத்தடையில்லை. அவளுக்கு எப்பொழுதும் பரோபகார சிந்தையே தவிர வேறு சிந்தையில்லை. அன்னமில்லார்க்கு அன்னம் படைப்பாள். வஸ்திரமில்லார்க்கு வஸ்திரம் தருவாள். தாயில்லாத பிள்ளைகளைத் தாய் போலத் தாங்குவாள். துக்கமுள்ளாரைத் தேற்றுவாள். அழுவாரோடு அழுது ஆறுதல் செய்வாள். வியாதிக்காரரை யடிக்கடி விசாரித்து வேண்டிய பக்குவங்கள் செய்வாள். புத்தியில்லார்க்குப் புத்தி போதிப்பாள். பக்தியில்லார்க்குப் பக்தியை யூட்டுவாள். வைவாரையும் வாழ்த்துவாள். வாழ்த்துவார்முன் தன்னைத்தாழ்த்திக்கொள்வாள். தீமை செய்வோர்க்கும் நன்மைசெய்வாள். ஏழைகளுக்குத் தன்னாலியன்றமட்டும் உதவி செய்வாள். பிறர் துன்பத்தை நீக்கத்தன்னால் முடியாதபோது அழுது இரங்கிக் கடவுளைப் பிரார்த்திப்பாள். ஆகையால் இத்தகைய நற்குண நற்செய்கையுடைய புண்ணியவதியே புவனோபகாரி.

பாக்கியம், ஞானம். கல்வி, வீரம், முதலியவைகளைப் பெண்பாலாகப் பேசுவது சகல பாஷைகளிலும் வழக்கமாயிருப்பது போலவே, இந்துக்களும் இலட்சுமி சரஸ்வதி, முதலானவர்களைப் பாக்கியம், ஞானம்

சௌரியம், கல்வி, முதலானவைகளுக்குத் தெய்வங்களென்று சொல்லுகிறார்கள். சகல பிராணிகளையுந்தாய் போலத்தாங்குகிற பூமிதேவியும் பெண்ணாயிருக்கிறாள். பூமியைவிட்டுத் திக்குகளிற் பார்ப்போமென்றாலோ திக்குகளும் பெண்களாம். ஆறுகளிற்குதிப்போமென்றாலோ கங்கை, காவேரி, கிருஷ்ணா, கோதாவரி முதலிய நதிகளும் பெண்களாயிருக்கின்றன. இவ்விதமாகபுருஷர்களுடைய வாழ்வுகளெல்லாம் பெண் மூலமாகக் கிடைத்திருக்க, புருஷர்கள் பெண்டுகளை அவமானப்படுத்துவது கிரமமா? பூர்வீக அரசர்களும், வித்வான்களும், ரிஷிகள் முதலானவர்களும் தங்களுடைய பத்தினிகளை எவ்வளவோ சௌரவமாக நடத்தினார்களென்றும் ஸ்திரீகளுடைய வார்த்தைகளை அவர்கள் ஒருக்காலும் தட்டினதில்லை யென்றும் இராமாயணம், பாரதம், நைடதம் முதலிய காவியங்களால் தெரியவருகிறதுமன்றி தேவர்கள் தங்களுடைய ஸ்திரீகளைக் கீழேவிட மனமில்லாமல், தங்களுடைய தேகங்களில் வைத்துக்கொண்டதாகவும் புராணாதிகளில் சொல்லப்படுகின்றன. சிவன் தனது பாரியை இடதுபாகத்திலும், மற்றொருபெண்ணைத் தலையிலும், விஷ்ணு மார்பிலும், பிரம்மா நாவிலும், இந்திரன் தொடையிலும், தங்களுடைய பத்னிகளை வைத்துக்கொண்டிருப்பதாகவும் புராணாதிகளில் சொல்லப்படுகின்றன. புராணங்களையும் இதிகாசங்களையும் மிக்க

கொண்டாடும் இந்துக்கள் ஸ்திரீகளை அடிமைபோல நடத்துவது பெரிய பெண் துரோகமாகும். பிரபல மான கவிசிரேஷ்டர்களும், பக்தர்களும் தங்களை நாயகிகளாகவும், கடவுளை நாயகனாகவும் பாவித்து ஸ்தோத்திரங்கள் செய்ததை நீங்கள் அறியவில்லை யோ? புருடர்கள் கடவுளை அடைவதற்குப் பெண் ஸ்வரூபம் காரணமாயிருக்கப் பெண்களைப் புரு ஷர்கள் உல்லங்கனம் செய்வது தெய்வ சம்மத மாகுமா? மனுஷாவதாரஞ் செய்த கடவுளை ஈன் றெடுத்த உலகமாதாவும் பெண் அல்லவோ? நம் மைப் பத்து மாதஞ் சுமந்து பெற்றெடுத்துப் பாலூ ட்டி, தாலாட்டி, சீராட்டி, வளர்த்த தாய் மார்களும் பெண்களல்லவோ? இரவெல்லாங்கண் விழித்து, அடி க்கடி பால் கொடுத்து, மருந்து கொடுத்துத் தாங்க ளும் மருந்துண்டு, பத்தியம் பிடித்து, பிள்ளைகளு டைய மல ஜலாதிகளை யெல்லாம் எடுத்து, பிள்ளைகளை வளர்ப்பதற்காகத் தாய்மார்கள் படுங்கஷ்டம் இவ்வள வென்று சொல்ல முடியுமா? நாம் கல்யாணமாகிற வரையில் தாய், தமக்கை முதலானவர்கள் கைகளில் வளருகிறதுந் தவிர, தாய்க்குப்பின் தாரமாதலால் விவா கமான பின் பத்தினிகளால் சகல சம்ரக்ஷணையுமடைகிறோமல்லவா? திவியமும், கீர்த்தியும், சம்பா திப்பதில் நாம் நம்முடைய எண்ணமெல்லாஞ் செலுத் துகிறோம். தாய், சகோதரி, பத்தினி, முதலானவர்கள்

நம்முடைய சுகத்தையும் பிரியத்தையும் மட்டுமேதில் அவர்களுடைய நினைவுகளை யெல்லாம் வைக்கிறார்கள். நாம் அவர்களுடைய க்ஷேமத்தைக் கருதுவது மிகவு மரிது. அவர்கள் நம்முடைய க்ஷேமத்தை நினையாத நேரமில்லை. அவர்களுடைய பேச்செல்லாம் நம்முடைய பேச்சே, அவர்களுடைய நினைவெல்லாம் நம்முடைய நினைவே, அவர்கள் செய்யுந் தேவதாப்பிரார்த்தனைகளெல்லாம் நமக்காகவே. அன்றியுப், நாம் நம்முடைய ஊரையும் வீட்டையும் விட்டுச் சிலநாள் பிரிகிறதாயிருந்தால், எவ்வளவோ மனஸ்தாபப்படுகிறோம். நம்முடைய பத்னிகள் பிறந்த ஊரையும், வீட்டையும் தாய்தந்தை சகோதரர் முதலான பந்துக்களையும் விட்டு, நம்மை நம்பி வருகிறபடியால், அவர்களை மிகவும் பிரீதியாய் நடத்தவேண்டியது நம்முடைய கடமை யல்லவா? பெண்களுக்கு இயற்கையாயுள்ள மாதவிடாய், கர்ப்பம், பிரஸவம், பிள்ளை வளர்த்தல், பாகஞ் செய்தல், புருஷன், மாமன், மாமி முதலியோரை உபசரித்தல், விருந்தோம்பல் முதலாகிய கஷ்டங்களையுந் துன்பங்களையும் சற்று நினைத்தால் மண்ணும் இரங்கும், மலையும் உருகும். அதைபற்றியே, பெண்ணென்றால் பேயுமிரங்கும் என்று சொல்லுகிறார்கள். மழை, பனி, வெயில், காற்று முதலியவைகளைத் தன் மேல் தாங்கிக்கொண்டு, ஸகல கஷ்டநிஷ்டூரங்களையும் ஸ்திரீகள் தாங்கிக்கொண்டு, சுகங்

களை மட்டும் நமக்குக் கொடுக்கிருர்கள். புருஷர்கள் எவ்வளவு படித்தாலும் ஸ்திரீகளுக்குள்ள அடக்கமும், பொறுமையும், சாந்தமும், உண்மையான விசுவாசமும் புருஷர்களுக்கு வருமா? இறந்துபோன பெண்சாதியின் பிரேதத்தை வெளியிற் கொண்டு போவதற்கு முன்னமேயே வேறே பெண் விசாரித்துப் புனர்விவாகத்திற்கு நாம் அடிபோடுகிறோம். புருஷ வியோகமான ஸ்திரீகள் வேறு கல்யாணமில்லாமல் ஆயுள் பரியந்தம் காலத்தைப் போக்குகின்றனர். சில பெண்கள் புருஷனோடு உடன்கட்டை யேறவும் சம்மதிக்கிருர்கள். சில பெண்கள் புருஷர்கள் இறந்துபோன துக்கத்தைச் சகிக்கமாட்டாதவராய்த் தற்கொலை புரிகின்ருர்கள். ஸ்திரீகள் சுகுமார தேகமும் மிருது வாக்கியமும், துர்ப்பலமும், நாணமும், அச்சமும் உடையவர்களானதால் கண் முதலிய மிருதுவான அவயவங்களை அதிக ஜாக்கிரதையுடனே பாதுகாப்பதுபோல, அவர்களிடத்திலும் அதிக கிருபை பாராட்ட வேண்டியது புருஷர்களின் கடமையாயிருக்கின்றது. தெய்வம் அறிய, குரு அறிய, சகல ஜனங்களுமறிய, ஆகாயம், பூமி அறிய ஸ்திரீ புருஷர்கள் செய்துகொண்ட கல்யாணத்தை மீறி கீரியும் பாம்பும் போல அடித்துக் கொள்வதும், அடிக்கடி மனஸ்தாபப்படுவதும் பரம பாதகமல்லவா? ஸ்திரீயும் புருஷனும் உடலுமுயிரும்போல் மாருநேசத்துடன்

எப்போதும் ஒத்து வாழ்வதே இவ்வில்வாழ்க்கையின் பயனும்.

ஸ்திரீகளைப் பிரீதியாக ஆதரணை செய்பவேண்டியது புருஷர்களுக்கு எப்படி கடமையோ, அப்படியே ஸ்திரீகளுக்கு நல்ல புத்தி கற்பிக்க வேண்டியதும் புருஷர்களுடைய முக்கிய கடமையா யிருக்கின்றது. இத்தேசத்தில் அதிபாலியத்தில் பெண்களுக்குக்கலியாணமாய்ப் புருஷர்களுடைய வீட்டிற்கு வருகிறபடியால், அவர்களுக்கு ஹிதோபதேசஞ் செய்து திருத்துவது புருஷர்களுக்குப் பிரயாசமாயிராது. யானை, குதிரை, மாடு முதலிய மிருகங்களையும் மனிதன் திருத்தித் தன்னுடைய இஷ்டப்படி நடக்கக் கற்பிக்கிறான். சூக்ஷ்ம புத்தியும் ஞானமுமுள்ள ஸ்திரீகள் விஷயத்தில் புருஷன் கொஞ்சம் சிரமமெடுத்துக் கொண்டால் அவர்களைத் திருத்துவது அதிசுலபமே. முக்கியமாகப் புருஷர்கள் தாங்களும் சன்மார்க்கத்தில் நடந்து ஸ்திரீகளுக்கும் நல்ல வழிகாட்ட வேண்டும் குரு ஒரு குற்றஞ் செய்தால் சிஷர்கள் ஒன்பது குற்றஞ் செய்யத் துணிவது போல் வயதில் மூத்தவர்களும், படித்தவர்களுமான புருஷர்கள் துன்மார்க்கஞ் செய்தால், ஒன்றுந் தெரியாத சிறு பிராயமுள்ள ஸ்திரீகளும் அந்தமாதிரியே நடக்க ஆரம்பிப்பார்களல்லவா? வீட்டுக்கு வெளியில் அந்நியர் முன்பாக ஒருவரும் தங்களுடைய துர்க்குணங்களைக்

காட்டுகிறதில்லை. வெளியில் தங்களுக்கு மேற்பட்டவர்களும், சமானமானவர்களும் அநேகர் இருப்பதால் தேகத்தைச் சட்டை, போர்வை முதலியவைகளால் மூடிக்கொண்டு, புறத்தில் சஞ்சரிப்பது போலத் தங்களுடைய சுபாவகுணங்களை மறைத்துக்கொண்டு, கோபமின்மை, இன்சொல், முகமலர்ச்சி, அறங்கூறல் முதலிய தர்ம வேஷந் தரித்துக்கொண்டு திரிகிறார்கள். வீட்டில் வந்தவுடனே புருஷர்கள் தேகத்தின் வெளி வேஷத்தைக் கலைத்துப் போடுவது போல உள்வேஷத்தையுங் கலைத்துத் தங்களுடைய யதார்த்த சொரூபத்தை ஏழைப் பெண்சாதி யிடத்திலும், பிள்ளைகளிடத்திலுங் காட்ட ஆரம்பிக்கிறபடியால் புருஷர்களுடைய துர்க்குணங்கள் பெண்சாதி பிள்ளைகளையுஞ் சேருகின்றன. புருஷன், மாமன், மாமி எப்படியோ அப்படியே பெண்சாதியும் பரிணமிக்கிறா ளென்பதும் நம் எல்லோருக்கும் சகஜமாயும், அநுபோக சித்தமாயுமிருக்கின்றது. பக்ஷி ஆகாயமெல்லாம் பறந்து திரிந்தாலும கடைசியில் கூடுகளிலும், மரஞ் செடிகளிலும் வந்து சேர்ந்து ஆறுதல் அடைவது போல, புருஷர்கள் வெளியில் படுகிற கஷ்டங்கள் சிரமங்களெல்லாம் வீடுகளில் பெண்சாதிமார்களை அதற்குப் பாத்திரர்களாகவும், விவேகிகளாகவும், புண்ணியவதிகளாகவுமாக்கிக்கொள்ளவேண்டியது புருஷர்களுடைய சொந்தப் பிரயோசனமாகும் அப்படிச் செய்து கொள்ளாமலிருப்

பது தங்களுடைய ஸ்வயகிருத அபராதமாகவு மிருக்கி ன்றன. புருஷர் ஸ்திரீகளுக்கு எப்பொழுதுங் கொடுமை செய்வதனால் நல்ல ஸ்திரீகள்கூட மனம் வெறுத்துக்கெ ட்டுப்போவதற்கு இடமுண்டாகிறது. நம்மை நேசிப்ப வர்களை நேசிக்கிறதும், விரோதிப்பவர்களை விரோதிக் கிறதும் மனித சுபாவ மாயிருக்கிறது. புருஷர்க ளுக்கு ஸ்திரீகளிடத்தில் பிரியமில்லாவிட்டால் ஸ்திரீகளுக்கு மட்டும் புருஷர்கள்மேல் எப்படி பிரீ தியுண்டாகும்? நிரபராதிகளான ஸ்திரீகளை நிஷ்கார ணமாய்த் துஷ்டை யென்றும், விபசாரி யென்றும், நாயே, பேயே, என்றும் புருஷர்கள் தூஷிப்பதனால், "பிராமணா உன்வாக்குப் பலித்தது" என்பதுபோல புருஷர்களுடைய வாக்குப் பலித்து நல்ல ஸ்திரீக ளும் துஷ்டைகளாய் விடுகிறார்கள். ஸ்திரீகளைப் புரு ஷர்கள் கை நீண்டி யடிப்பது மகா கொடிய வழக்கமா யிருக்கிறது. அணுவை மலை எதிர்த்தது போலவும், எலியைப் புலி எதிர்த்தது போலவும், துர்ப்பலமுள்ள ஸ்திரீகளைப் புருஷர்கள் திட்டி யடிப்பதினால் புருஷர் களுக்கே அவமானமல்லவா? பக்ஷிகள் மிருகங்கள் கூடப் பெண்ணுக்காக, ஆணும் ஆணும் அடித்துக் கொள்ளுகிறதே யல்லாது பெண்ணையடித்து உபத்திர வஞ் செய்கிற ஆண் பக்ஷியையாவது, மிருகத்தையா வது நாம் கண்டது மில்லை, உண்டெனக் கேட்டது மில்லை. ஸ்திரீகளை யடிக்கிற புருஷர்கள் பக்ஷி மிருகங்

களேயாவது குருவாக வைத்துக் கொண்டு அவைக ளிடத்தில் ஞானேபதேசம் பெற்றுக் கொள்ள வேண் டியது கிரமம்.

# Position of Women.

# 4. மாதர்களின் நிலைமை.

---

இத்தேசத்திலுள்ள சிற்சில குடும்பங்களில் பெண்கள் அடிமைகளேப் போலவும், மிருகங்களேப் போலவும், நடத்தப்படுவது மிகவும் பரிதபிக்கத்தக்க விஷயமாயிருக்கின்றது. ஜாதியும், செல்வமும், எவ் வளவு உயர்வோ, அவ்வளவுக்கு ஸ்திரீகளுடைய நிர்ப் பாக்கியம் பெரிதா யிருக்கின்றது. உயர்ந்த குலத்தவ ரென மதிக்கப் படும் பிராம்மணர் முதலானவர்கள் ஸ்தி ரீகளே விலேக்கு வாங்குவதுபோல் வாங்கி நிஷ்டூரமாக நடத்துகிருர்கள். சிற்சில குடும்பங்களில் நாயே, பே யே, கழுதையே, மாடே என்கிற பேச்சைத்தவிர வேறே ஒரு பேச்சும் ஸ்திரீகளிடத்தில் புருஷர்கள் பேசுகிறதில்லே. சில குடும்பங்களில் மாமியாருடைய உத்தரவில்லாமல், புருஷனுக்கும் பெண்சாதிக்கும் பேட்டியே கிடையாமலிருப்பதுமுண்டு. அவர்கள் சந் தித்தாலும், கல்லுந் தேங்காயுஞ் சந்திட்பதுபோலும், எலியும் பூனேயுஞ் சந்திப்பது போலுமேயல்லாமல்,

குளிர்ந்த தரிசனத்தோடிருப்பதில்லை. 'ஸ்வர்க்கத்துக்குப்போயுஞ் சோற்றுப் பிச்சை' எடுப்பதுபோல அநேகர் கலியாணஞ் செய்துகொண்டும் நித்திய சந்நியாசிகளாகவே யிருக்கிறார்கள்.

அத்திப்பூத்தாற்போல், தப்பித் தவறிப் புருஷர்கள் ஸ்திரீகளிடத்தில் ஒரு மதுரமான வார்த்தையைப் பேசிவிட்டாலோ, மாமிக்குக் கடுப்பு, மாமனாருக்கு மனஸ்தாபம், நாத்திக்கு வயிற்றெரிச்சல், ஊரெல்லாம் ஓமல்; கன்னெஞ்சுடையமாமிகள் பலர்கடு கடுஎனச்சொல்லுங் கடூரவார்த்தைகளைக்கேட்டுக் கண்ணீர் சொரியும் மடைந்தையரான மருமிகள் தென்னிந்தியாவில் எத்தனையோபேருளர். என்னே காலம்! புருஷன் பெண்சாதியைத்திட்டியடித்தால் மாமியாருக்கு இறந்துபோனதன் புருஷன் மறுபடியும் பிழைத்து வந்ததுபோல உற்சாகம் உண்டாகிறது, 'மாமியாருடைத்தால் மண்கலம், மருமி உடைத்தால் வெண்கலம்' என்பது போல, மருமகள் மேலே மாமியார் தோஷஞ் சொல்லாத நேரமில்லை. மாமிக்குக் கொடுமைசெய்கிற மருமக்கள்மாருஞ் சிலருண்டு. நாய், பசு, மாடு முதலிய மிருகங்களைப் பலர் எவ்வளவோ தயையாக நடத்துகிறார்கள். அவ்வளவு பட்சங்கூட ஸ்திரீகளிடத்தில் காட்டுகிறதில்லை. கஷ்ட நிஷ்டூர மெல்லாம் ஸ்திரீகளுடைய பாகமாகவும் சுகங்களெல்லாம் புருஷர்களுடைய டாகமாகவும் இருக்கின்றன. ஒரு ஸ்திரீக்கு எவ்வளவு

தான் வயிறு பசித்தாலும் புருஷன், மாமன், மாமி முத லானவர்களெல்லாருஞ் சாப்பிட்டு எல்லா வேலைகளும் முடிந்த பிற்பாடு புருஷனுடைய எச்சிலுக்காகப் பெ ண்சாதி காத்திருக்கவேண்டியதே யல்லாமல் அவள் முந்தி சாப்பிடக்கூடாது. தாயும் பிள்ளையும் ஒன்றானு லும் வாயும் வயிறும் வேறு என்பதற்கிணங்க ஸ்திரீக்கு ப்பசித்தபோது, அவள் முந்திப் புசித்தால் குற்றமென் ன? புருஷன் பாதி பெண்சாதி பாதி ஆக இருவ ருங்கூடி ஒரு தேகமென்பது சகலமதசம்மத மாயி ருக்கின்றது. சில மதஸ்தர்களுடைய கல்யாணம் இக லோக மட்டுஞ் சம்பந்த மாயிருக்கின்றது. சைவ, வைஷ்ணவர்களுடைய கல்யாணங்கள் இகபரமிர ண்டிற்கும் சம்பந்தமாயிருக்கின்றன. ஏனென்றால், புருஷனுக்குப் 'புத்' என்கிற நரக நிவர்த்தியாவதற் குப் புத்திரன் அவசியமானமையினாலும் ஸ்தி ரீயில்லாமல் புத்திர உற்பத்திக்கு மார்க்க மில்லா மையினாலும் புருஷர்கள் இகபரசாதன மடைவதற்கு ஸ்திரீகள் முக்கியமென்று தர்ம சாஸ்திரம் முறையிடு கின்றது. அல்லாமலும், பெண்சாதியில்லாதவன், ஔபாசனம், வைசுவதேவம் முதலான நித்தியகர்மங் கள் செய்யக்கூடாதென்றும், பாப புண்ணியங்கள் ஸ்திரீயையும் ஸ்திரீயினுடைய பாப புண்ணியங்கள் புருஷனையுஞ் சேருமென்றும் வேத சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒருவருடைய பாப

புண்ணியங்கள் மற்றொருவரைச் சேருமென்கிற விதியை மேனாட்டார்கள் ஒருபோதும் அங்கீகரிக்கிறதில்லை. இது நிற்க, நமது சாஸ்திரம் பெண்கள் பட்சத்தில் இருக்கிறதென்பதற்கு மேற்கண்ட விதிகளே பிரத்தியக்ஷ நிதர்சனங்களா யிருக்கின்றன. சாஸ்திரத்தையுந் தவிர, உலகத்தில் நடக்கிற அனுஷ்டானங்களும் பெண்களுக்கு அனுகூலமாகவே யிருக்கின்றன. எப்படியென்றால், ஒரு பெண்ணை ஒருவன் பாணிக் கிரகணஞ் செய்யும்பொழுது, ஊருக்கெல்லாந் தாம்பூலம் வைத்துப் பந்துக்கள் முதலிய சகல ஜனங்களையும் வரவழைத்துப் பந்தல் அலங்கரித்து, மகரதோரணங்கள் கட்டி, வாழை, கமுகுகள் நாட்டி, சங்கீத மேள வாத்தியங்கள் ஸமுத்ரம்போலக் கோஷிக்க, அநேக சூரியர்போல் தீபக்கோடிகள் பிரகாசிக்க, அன்னதானம், சொர்ணதானம், பூதானம், கோதானம், எல்லாம் வழங்கி, சுகந்த புஷ்பம், சந்தனம் முதலான வாசனா திரவியங்கள் பரிமளிக்க, பஞ்ச பக்ஷிய பரமான்னத்துடன் கூடிய போஜனம் பெருகியிருக்க, பெரியவர்கள் ஆசி கூறப் பெண்கள் சுப சோபனங்கள் பாட, வெகு சம்பிரமத்துடன் கல்யாண மகோற்சவம் நடக்கின்றதல்லவா? ஓர் ஏழையினுடைய கல்யாணமா யிருந்தாலும் எவ்வளவோ விருந்துகளும், சிறப்புகளும் வேடிக்கை விநோதங்களும் நடக்கின்றன.

கலியாண மானது, பிரமம், தைவம், ஆரிடம், காந்தர்வம், இராக்கதம், ஆசுரம் என ஆறுவகையுண்டு. இதில்

குருகுலத்தில் வாசஞ் செய்து நல்ல வேதாத்தியானியா யிருக்கும் பிரம்மசாரி யொருவனுக்குக் கன்னிகையைக் கொடுப்பது பிரமம் எனப்படும். வேள்விசெய்யுங் குருவிற்கு அவ்வேள்விகடந்தபின், ஸ்ரீதனத்துடன் கொடுப்பது தைவம். யாதாமொரு பசு அல்லது எருது முதலியவைகளைப் பெற்றுக் கொண்டு கன்னிகையைக் கொடுப்பது ஆரிடம். மணமகனும் கன்னிகையு மாகிய இருவரும் மனமொத்து மணங்கொள்வது காந்தர்வம். பெண்ணும் சுற்றமும் உடன்படாது வலிதிற்கொள்ளு ம்மணம் இராக்கதம். பெண்ணைத்தகப்பனிடம் விலைக்கு வாங்கிக்கொள்வது ஆசுரம். ஆகவே ஆபஸ்தம்பர் முதலானோர் இம்மேற்கூறிய ஆறுவித கலியாணங்களில் முதல் மூன்றையே மிக்க சிறப்புற்றுக் கூறியிருக்கின்றனர். ஆனால், பௌதாயனரும் கௌதமரும் எண்வகை விவாகமெனக்கூறியுள்ளார் இதில் பிராஜாபத்தியம், பைசாசம் எனஇருவகை மணத்தையுஞ் சேர்த்திருக்கின்றனர். விவாகமானது சகோத்திரத்தில் செய்யக் கூடாதென்று வஸிஷ்டர், ஆபஸ்தம்பர் முதலானோர் கூறியிருக்கிறார்கள். பௌதாயனர்மாத்திரம் அம்மான் பெண்ணைக்கலியாணஞ் செய்து கொள்ளலாமெனக் கூறியிருக்கிறார். வசிஷ்டர், கன்னிகைகள்ருதுவான மூன்று வருடங்கழிந்த பின்னர் புருஷனை வரிக்கலாமெனக் கூறியிருக்கின்றனர். கலியாணத்தில் பெண்ணும் பிள்ளையுமிருவரும் வேதமந்திரங்களை உச்சாடனஞ்செய்து கொண்டு அக்கி

னியைச் சுற்றி வலம்வந்து அம்மி மிதித்து "நாமிருவரும் இன்றுமுதல் ஒருமனத்தினராயிருந்து கிரஹஸ்தாஸ்ரமத்தைப் பழுதின்றி நடத்தல் வேண்டும்'' என்று கூறிப்பெரியோர்களை வணங்குகிறார்கள் ஆகவே, மாதர்களின்றிப் புருடர்களுக்கு விரதம்,தவம், யக்ஞம், ஓமம் முதலிய கர்மங்கள் யாதொன்றுங் கிடையா. இவ்விருவர்களும், கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்மம், நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம், விவாகமுதலிய சடங்குகளைச் சரிவர நிறைவேற்றவேண்டும். இதல்லாமல் இத்தம்பதிகளிருவரும் அக்னிதானம், அக்னிஹோத்திரம், தர்ஸபூர்ணமாஸம், சாதுர்மாஸ்ய நிருத்த பசுபந்தம், வாஜபேயம், அதிராத்திரமுதலிய ஸ்ரௌத கர்மங்களையுஞ் செய்ய வேண்டும். இம்மேற் கூறிய காரணங்களினால் மாதர்கள் தங்கள் கணவன்மார்களுடன் தக்க சுபகாரியங்களில் ஈடுபட்டு ஒருவர்க் கொருவர் உதவுவதுடன், மாதர்கள் தக்க நிலைமையை வகித்திருந்தார்கள். இதுடன் இருக்வேதத்திலும், ஸ்திரீகள், புருஷர்களுடன் ஒருமைப்பட்டு இந்திரன், விஸ்வாவஸு முதலிய தேவதைகளை ஆராதித்ததாகத் தெரியவருகிறது. இந்த இருக்வேதத்தில் சிற்சில மந்திரங்களினால், மாதர்கள் சிறுபிராயத்தில் மணங்கொண்டதாகத் தெரியவில்லை. மாதர்கள், வெகுவாய்க் கன்னிப்பருவம் கழிந்த பின்னரே வதுவை செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. பின்

வருவது இருக்வேதத்தின் சிற்சில மந்திரங்கள் :—

1. ஓ விஸ்வாவஸு! இவ்விடத்தை விட்டு எழுந்திரும். இக்கன்னிகைக்கு மணம் நிச்சயமாய் விட்டது. உமக்கு அநேக நமஸ்காரம். தகப்பனுர் கிரகத்திலேயே இன்னமும் வாசஞ் செய்யும் கன்னிகையிடம் போய்ச் சேரும். ஆகவே அவளே உமக்குரியவள். அவளை நீர் நாடும்.

2. ஓ விஸ்வாவஸு! இவ்விடத்தை விட்டு எழுந்திரும். உமக்கு மேன்மேலும் நமஸ்காரம். நன்ருய் வயதுவந்த கன்னிகையிடஞ் சென்று ஒரு மணமகன் தேடி அவளை மனைவியாக்கும். அர்யமாவும், பாகாவும் நம்மை நல்வழிப்படுத்தட்டும். ஓ தேவதைகளே! புருஷனும் பெண்சாதியும், மனமொத்து வாழக்கடவராக!

3. ஓ பெண்ணே! உன்னுடைய கட்டுகளை இப்பொழுது நீக்கிவிட்டோம். நாங்கள் உன்னை ஒரு புருஷனிடத்தில் ஒப்புவித்தோம். ஆகவே, உன் புருஷனே உனக்குத்தெய்வம்! அவனிருக்குமிடமே, சத்தியத்திற்கும், சத்காரியத்திற்குமிருப்பிடம்.

ஆகவே, ஓ இந்திரா! அத்தம்பதிகளிருவரும் சுபமாய் வாழட்டும். ஓ மாதே! உன் கணவனிடஞ் சென்று அவனுடைய கிரகத்திற்கு எஜமானியாயிரு. உன் வயிற்றில் நல்ல சத்துள்ள குழந்தைகள் ஜனிக்கட்டும். கிரககாரியத்தைச் சற்றும் தவறாமற்செய். முதல்

கந்தர்வன் ஏற்றுக்கொண்டான். இரண்டாவது உன்னை சோமன் ஏற்றுக்கொண்டான். மூன்றாவது அக்னி ஏற்றுக்கொண்டு, பின் உன்னை சீதனத்துடன் புருஷனுக்குக் கொடுத்தான். பிரஜாபதியானவர் நல்ல புத்திரர்களை யளிக்கட்டும். அர்யமான் எங்களிருவர்களையும் சாகுமளவும் ஒன்றாய்க்கூட்டி வைக்கட்டும். ஓ மாதே! கோபங்கொள்ளாதே. உனது கணவனுடைய சுகத்தைக் கவனி. ஆடுமாடுகளுக்கு நன்மையைச்செய். உன்மனம் எப்பொழுதும் சந்தோஷமா யிருக்கட்டும். உனது அழகு நன்கு பிரகாசிக்கட்டும். தேவதைகளுக்கு வேண்டிய கர்மங்களைச்செய். வேலைக்காரர்களுக்கு அன்பாயிரு. ஓ இந்திரா! இப்பெண்ணினிடமிருந்து 10 குமாரர்கள் பெறட்டும். பத்தும் பெற்றுப் பெருவாழ்வு வாழட்டும். கிரகத்திலுள்ள மாமன், மாமி முதலானோர்கள் மத்தியில் விளங்கட்டும். என்றிவ்வாறிருப்பதினால் பூர்வம் மாதர்கள் இருதுவான பிறகே விவாகஞ்செய்து கொண்டன ரென்பதும், மாதர்கள் சிறந்த சுதந்திரத்தை நாயகனுடன் அனுபவித்தார்களென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது இன்னும் மாதர்கள் தங்களுக்கு இஷ்டமான புருஷர்களை வரிக்க சுதந்திர மிருந்தது. சீதையானவள் தனக்கிஷ்டமான ஸ்ரீராமபிரானையும், துரௌபதி தனக்கிஷ்டமான பஞ்ச பாண்டவர்களையும், தமயந்தி நளனையும், சாவித்திரி சத்திய

வாளையும், மைத்திரேயி யாஜ்ஞவல்கரையும், அருந்துதி வஸிஷ்டரையும் முறையே அவரவர்களுக்கிணங்க வரித்துக் கொண்டார்கள். இதல்லாமல் இராஜபுத்திர வம்சத்தில் தோன்றின ஸம்யுக்தா தேவி பிரிதிவி இராஜனையும் அவ்வாறே வரித்துக் கொண்டாள். சிற்சில மேனாட்டார்கள். இந்தியமாதர்களுக்குக் கல்யாணவிஷயத்தில் ஸ்வதந்திரங் கிடையாதென்று கூறுவது மடமையே. அக்காலத்தில் மாதர்கள் புருஷர்களுக்குச் சரிசமானமாக வித்யாப்பியாசஞ் செய்துகொண்டு அநேக காரியங்களையுஞ் செய்திருக்கின்றனர். யாஜ்ஞவல்கர் தனது மனைவியான மைத்திரேயியைக் கூப்பிட்டுப் பெண்ணே! "நான் கானகஞ் செல்லுகிறேன். நீ இங்குதானே சுகமாய் வீற்றிரு" என்றனர். மைத்திரேயி உடனே இச்சுகம் சொர்க்கத்தைக் கொடுக்குமா ? என்ற கேள்வியைக் கேட்கவும் உடனே அவர் கொடுக்காது. என்றார். அதற்கு மைத்திரேயி, ஸ்வாமி! மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியதும், மேலான சுகத்தை யளிப்பதும் பேரானந்தஞ் செய்வது மானதெதுவோ அதைச் சாதித்தருளும் என்று கேட்க, உடனே, யாஜ்ஞவல்கர், மைத்திரேயியை யழைத்து உடசரித்து அவளுக்கு ஆத்ம அனாத்ம வித்தையைக் கற்றுக்கொடுத்தார். அக்காலத்தில் இவ்விருவர்களுக்கும் அநேக சம்வாதங்களுண்டாயின. ஆகவே, மாதர்கள் மோட்ச சாம்ராஜ்ய

விஷயத்தைக்குறித்துத் தர்க்கிக்கவும் உபதேசிக்கவும் பாத்தியதையுள்ளவர்களா யிருக்கிறார்கள். துரோபதை தன் கணவன் மார்களுடன் கானகஞ் சென்று அவ்னவர்களின் துயரத்தைப்பற்றி, யுதிஷ்டிரருடன் அநேக இராஜ தர்மத்தைப்பற்றி தர்க்கித்திருக்கிறாள், இவள் பெரிய இராஜதந்திரி. தென்னாட்டில் அல்லியரசாணி முதலானோர், புருஷர்களைவிடப் பன்மடங்கு நீதியுடன் இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்து வந்தார்கள். ஸ்திரீகள் இராஜகாரியங்களைச் செய்துவந்தனர். இதல்லாமல் தசரதர் சம்பராசுரனைக் கொன்ற காலத்தில் கைகேயி சாரத்தியஞ்செய்ததும், அர்ச்சுனனுக்கு சுபத்திரை நடுயுத்தத்தில் யுத்தத்தின்பயங்கரத்தைச்சற்றுங் கவனியாது சாரத்தியஞ் செய்ததுமான, இத்தியாதி அதிசயங்கள் மாதர்களின் விசேஷஸ்தானத்தைக்காண்பிக்கின்றதல்லவா? இதல்லாமல் மாதர்கள் தங்கள் கணவன்மார்களுக்காக, உயிர்துறந்தும், கொடியகஷ்டங்கள் பட்டும் வருந்தியுமிருக்கிறார்கள். கணவன் பொருட்டு இயமனை நோக்காது அவனிடம் வாதாடி கணவன் உயிரைக் கொணர்ந்த சாவித்திரியும், நாடிழந்து, உற்றதனமிழந்து, பாலனையிழந்து, புருஷனைப்பிரிந்த மாதான சந்திரமதியும் சத்தியத்தின் பொருட்டுத் தன் கணவனுடன் சரியாகக் கஷ்ட மனுபவிக்க வில்லையா? ஆகவே, எண்ணிறைந்த மாதர்கள் இராஜதந்திரத்திலும் கல்வி கேள்விகளிலும், புருஷபக்தியிலும் சிறப்படைந்

திருக்கிறார்கள். மாதர்கள் அணிமணிகளணிந்துபோர்க் கோலங் கொண்டு கொடிய யுத்தங்கள் புரிந்திருக்கிறார் கள். மாதர்கள் இராஜபுதனத்தில் தங்கள் கணவன் மார் களையும், புத்திரர்களையுந் தூண்டி யுத்தத்திற்கனுப்பி யிருக்கிறார்கள். இதுதவிர மாதர்கள் சிறந்த போதகா சாரியர் களாகவு மிருக்கிறார்கள். அசோகசி சக்ரவர்த்தி யின் சகோதரியான சங்கமீதா என்பவளும், இன்னு மநேக பெண்களும் பௌத்தமதத்தைப் பரவச் செய்வ தின் பொருட்டுத் தென்புறத்திலுள்ள இலங்கை (ஸிலோன்) பர்மா முதலிய நாடுகளுக்குச் சென்று ஆங்காங்கு அரிய பிரசங்கங்களைச் செய்து தங்கள் மதத்தை உத்தாரணஞ் செய்திருக்கின்றார்கள். மிதுலா நகரில் கார்கி என்பவள் ஜனக மகாராஜ னுடைய வித்வத் சபையில் கல்வியில் மிக்க பாண்டி த்தியமுள்ள ஆடவர்களும் நடுங்கும்படித் தர்க்கஞ் செய்து, தனது சித்தாந்தத்தை ஸ்தாபித்தாள். இந் நாட்டில் புருஷர்கள் எங்ஙனம் யோகிகளாயிருக்கிறார் களோ அங்ஙனமே மாதர்களும் யோகினிகளா யிருந் திருக்கிறார்கள். ஸ்ரீ ராமபிரானைப் பஞ்சவடியில் பழ முதலானவைகளால் உண்பித்த சபரி சிறந்த யோகினி யில் ஒருவள். உலோபா முத்திரை, அனுசூயை முத லான ஸ்திரீ ரத்தினங்கள் தங்கள் கணவன் மார்களுட னே யிருந்துகொண்டு சிறந்த இராஜ யோகத்தை அப்பியசித்துப் பதிவிரதா சிரோன் மணியாய் விளங்கி

ஞர்கள். பௌத்த ஜைனிய காலங்களில் அநேக மாதர்கள் புருஷர்களைப் போலவே, குஞ்சியை நீக்கி சந்நியாஸிகளாக யிருந்தனர். ஜகன்னாத மென்னும் முக்திதரும் நகரில் பத்மினி என்னும் நாரீமணி ஜய தேவரை மணந்து அவருடன் இல்லறத்தை நடத்தி வருங்நாளில் அந்நாட்டரசன் மனைவி, இப்பத்தினியின் பதிவிரதா தர்மத்தைப் பரீட்சிக்க எத்தனித்தவளாய் அன்னவள் பால் சென்று "வேட்டைக்குச் சென்ற நின் கணவன் கானகத்தில் இறந்தான்" என்று வேடிக்கையாகக் கூறினள். இச்சத்தத்தைக் கேட்ட பத்மினி மெய்யென்றுணர்ந்து இதைச் சகியாதவளாய் ஆவி துறந்தனள். இச்சந்தர்ப்பத்தைக் கண்ட ராஜ பாரியை பயங்கொண்டு அரசனுக்குத் தெரிவிக்க அரசன் உயிருடனிருக்கும் ஜயதேவருடன் வெகு வினயத்துடன் கூற, அதற்கு எல்லாம் ஈசன் செயல் என்று அனுதாபத்துடன் கூறினர். ஆகையால் இத்தகைய பதிவிரதா மணிகளின் ஒளியானது இன்றைக்கும் இப்பரத கண்டத்தில் குறையாமல் பிரகாசிக்கின்றன. இவர்களுடைய நிலைமையை எந் நாட்டவர்களும் கொண்டாடத் தக்கதாயிற்று. இராஜ புத்திர வம்சத்தில் தோன்றின அமரசிங் என்பவரின் குமாரத்திகளி லொருவளான விமலாதேவி, மிக்கசிறப் புற்று வாழ்ந்தனள். தகப்பனார் மொகலாயச் சக்கிர வர்த்தியான ஔரங்கசீப் என்பவனுக்கு விமலாதேவி

யை மணஞ்செய் விக்க சம்மதம் பெற்றும், விமலாதே வி ஆஹா! க்ஷத்திரியனுக்குப்பிறந்து மொகலாயவம்சத திலா நான் புகுவது? நன்று, நன்று, என்னையொத்த வம்சத்திலே பிறந்த இராஜபுத்திரனுக்கு வாழ்க்கைப்படு வேனே தவிர, மண்டலாதிபதியாயிருக்கும் மொகலாய சக்கரவர்த்திக்கு ஒருநாளும் வாழ்க்கைப்படேன் என் று கூறினள். இதன் மூலமாயும் இன்னுஞ் சிற்சிலகாரண ங்களினாலும் ஔரங்கசீப் இவ்விமலா தேவியினிடம் பகைத்தான். இதையுணர்ந்த விமலா தன் உயிர்வாழ்க் கைக் குரியவனான இராஜசிங் என்பவருக்குக் கடிதமெ ழுதி மொகலாயருக்கெதிராகத்தானும் தன்கணவனும் யுத்தம் புரிந்து இப்பொன்னுலகில் அழியாப் பெயர் பெற்றாள். ஆகவே, விமலாவின் பெயர் குன்றின் மேலி ட்ட விளக்குபோல் எந்நாளும் பிரகாசித்துக்கொண்டிரு க்கின்றது. வைஷ்ணவ சம்பிரதாயத்தில் பன்னிரண் டாழ்வார்களில் ஒருவரான சூடிக்கொடுத்த நாச்சியார் என்று வழங்கும் ஆண்டாள், சிறுபிராயந் தொட்டே சாக்ஷாத் பகவானையே வதுவை செய்ய வேண்டு மென்று எங்ஙனம் கோரி முடித்தனளோ அம்மா திரியாகவே, உத்திரதேசத்தில் மீராபாய் என் னும் அணங்கு ஒருவள் பால்மணம் மாறாச் சிறுபிராயந் தொட்டே பக்தி பரவசப்பட்டுப் பாண்டவ சகாயனான கிருஷ்ணபகவானையே வரிக்கவேண்டுமென்று அனுதி னமும் சிந்தைமேலிட்டுக் கடைசியில் மனம்போல மாங்

கல்யம் என்றமுதுமொழியைப்பொது மொழியாக்கிடாமல் உலோகமுண்ட திருவாயனை மணந்தாள். ஆகவே, இந்நாட்டு வனிதைகளுக்குச் சர்வசுதந்தரமுமிருந்தது. தாங்களே கணவன்மார்களைத் தேடவும், தகப்பனார் வழி நின்று தங்கள் அபிப்பிராயப்படிச் செய்யவும், இராஜதந்திரம், யுத்தம், தொழில், கல்வி, ஞானவழி முதலிய சகலவழிகளிலும் ஆடவர்களைப்போல சகலவிதத்திலும் ஸ்வாதீனத்தை யடைந்து வந்தார்கள். இதையொட்டியே மனுவும் மாதர்களுக்குச் சிறந்த ஸ்தானத்தைக் கொடுத்திருக்கிறார். இவர், மாதர்கள் புருஷர்களுடைய ஆதீனத்தி லிருக்கிறார்களென்று கூறி, மாதர்கள் சுற்றத்தார்களாலும், இன்னும் இதரர்களாலும் கௌரவப்படுத்தப் படுகின்றார்கள். உபாத்தியாயரைக் காட்டிலும் பன்மடங் குயர்ந்தவர் ஆசாரியர். ஆசாரியரைக் காட்டிலும் 100 மடங்குயர்ந்தவர் பிதா. பிதாவைக்காட்டிலும் 1000 மடங்குயர்ந்தவள் மாதா வென்று கூறுகிறார். ஸ்திரீகள், வீட்டிலிருக்கும் தகப்பன், உடன் பிறந்தோன், கணவன், மைத்துனன் முதலிய சகலராலும் பூசிக்கப்பட்டவர்கள். எங்கு மாதர்களை நன்கு பூசிக்கப்படுகின்றதோ அங்கு தேவதைகளும் பூசிக்கப்பட்டு சந்தோஷமடைகின்றனர், எங்குமாதர்களைப் பூசிக்கவில்லையோ அங்கு தபம், ஓமம் முதலிய கர்மங்கள் கிடையா. எக்குடும்பத்தில் மாதர்களின் துயர் ஆறாய்ப் பெருகுகிறதோ, அக்குடும்பம் நசித்துப்போகும். அங்ங

னம் நசித்துப்போகும் குடும்பம் மறுபடியும் விர்த்தியா காது. இதுடன் மாதர்களின் கடமையையும் மனுசொல்லுகிருர். மாதர்கள் தங்கள் சிறுபிராயத்தில் தசப்பனுராதீனத்திலும், விவாகமானவுடன் கணவனிடத்திலும், கணவனிறந்தபின் புத்திரர்களிடத்திலு மிருப்பதினுல் இவர்களுக்கு ஸ்வாதீனம் எந்நாளுங்கிடைபாது. இவர்கள் எக்காரணத்தினுலும் மேற்கூறியவர்களைவிட்டுப் பிரியலாகாது. அங்ஙனம் பிரியும்மாது,பிறந்தவீட்டிற்கும் புகுந்தவீட்டிற்கும் துரோகியாகிருள். மாதர்கள் எக்காலத்தும் சந்தோஷமாயிருக்க வேண்டும். வீட்டுக்காரியங்களில் நல்ல சாமர்த்தியசாலியாயிருக்கவேண்டும். பாத்திரங்களைக் கழுவுவதிலேயும், பணஞ்செலவழிப்பதிலேயும் சர்வஜாக்கிரதையாயிருக்கவேண்டும். புருஷனையேதெய்வமாகக்கொள்ளும் மாதர்களுக்கு நோன்பு,விரதம், ஜபம், தியானமுதலியவைகள் யாவும் வேண்டுவதில்லை. என்றிவ்வாறு மநு தன் ஸ்மிருதியில் கூறுகிருர். இங்ஙனம் இப்பாரதகண்டத்து மார்தகளின்சிறப்புவிசேஷமானது. மாதர்கள் எந்நாளும் கோஷாக்களாயிருந்ததில்லை. இக்கோஷா ஆசாரமானது மகம்மதியர்களின் அரசாட்சிகாலத்திலேயே ஏற்பட்டது.சிற்சில காமாதுரர்களான சக்கரவர்த்திகளின் நடவடிக்கை களினுல் பயங் கொண்ட இவர்கள் அக்கோஷா ஆசாரத்தைக் கடைப்பிடிக்கவும், சிறுபிராயத்திலேயே மணஞ் செய்வதுமான சம்பிரதாயத்தைக்கொண்டார்கள். மாதர்கள்

எந் நாட்டிலும் துயரற்றிருக்க வில்லை. மேனுடுகளில் மாதர்களின் துயரம் வெகு பரிதபிக்கற்பாலது. மேனு டுகளில் விவாக மாகாத மாதர்களின் துயரம் ஆருய்ப் பெருகுகின்றது. இந் நாட்டில் கணவனிழந்த கைம் பெண்களின் துயரம் ஆருய் பெருகின்றது. ஆதலால், மேனுட்டு ஸ்திரீகள் இந் நாட்டு மாதர்களைவிட அதிக சுதந்தரம் அனுபவிக்கிருர்களென்று கூறுவது முற்றி லும் பிசகு. இது அக்கரைக்கிக்கரைப்பச்சை யென் னுந் தன்மையுடைத்து. இந் நாட்டு மாதர்கள்மேனுட்டு மாதர்களைப் போலவே கைத்தொழில்களிலு மமர்ந்து தொழில் புரிந்துவருகிருர்கள். தொன்று தொட்டு இந் நாட்டு மாதர்கள் தங்கள் கணவன் மார்களுக்கு ஒத்தா சையாக அன்னவர் செய்யுந் தொழில்களில் இவர்களும் புகுந்து தொழில்புரிந்து வருகின்றனர். கிராமங்களில் இன்றைக்கும் புருஷன் பெண்சாதி இருவரும் ஏக மனதுடன் குலாவிக்கொண்டு தொழில் புரிகின்றனர். மாதர்களின் நிலைமையானது நம் நாட்டில் மிக்க வனப் பைத்தரும். அவர்கள் இந்துதேச சரித்திரத்தில் தக்க தோர் ஸ்தானத்தை வகித்து வருகின்ருர்கள். மாதர் களின் பக்தியினுலும், தைரியத்தினுலும், உபாக்கி யானத்தினுலும், முயற்சியினுலும், அநேக ஆடவர்கள் மேலானபதவியை யடைந்திருக்கிருர்கள், ஆகவே ஆட

வர்கள் பெண்டிர்களைப்பரிபாலித்து நன்கு பிரகாசிக்கச் செய்யவேண்டும். இனி இரண்டாவது பாகத்தில், ஸ்திரீபுருடர்களின் பரஸ்பரக்கடமைகளும், பெண்வரன் பிள்ளைவரனும், மாதர்களின் யுத்தசாகஸங்கள் முதலியனவும் கூறப்படும்.

(முதற்பாகம் முற்றும்)


இந்தியஸ்திரீபுஷர்களுக்கு இன்றியமையாத இருபுத்தகங்கள்.

1 மகாத்மா காந்தி அணா. 4.

2. இந்திய மாதர்களின் நிலைமை (2. ம்பாகம் அணா. 4.

புத்தகம் வேண்டுவோர்,

'பிரம்மவாதின்' ஆபீஸ் 14, பேகர்வீதி சென்னையில் பெற்றுக்கொள்ளலாம்.


The Brahmavadin Press, 14 Baker Street, Madras.